
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, NOVEMBER 14, 2023

செவ்வாய்க்கிழமை நவம்பர் 14, 2023 | ஒளி: 09 கதிர் 127 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free




# "புரட்சிக்கு ஒன்றிணைக"

## 2024 பட்ஜெட்டை சமர்ப்பித்து ஜனாதிபதி அழைத்தார்



இது தேர்தல் வரவு-செலவுத் திட்டமல்ல, எல்லோரும் அதனையே எதிர்பார்க்கின்றனர். எனினும், அடுத்த வருடத்தில் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல் நடைபெறும். 2024ஆம் ஆண்டுக்கான இந்த வரவு-செலவுத் திட்டம் புரட்சிக்கரமானது. அந்த புரட்சிகர வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த சகலரும் எவ்விதமான பேதங்களும் இன்றி ஒன்றிணைய வேண்டும் என்று நிதியமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அனைவரிடமும் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில், 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றினார். உரையின் இறுதியிலேயே இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

- அரச ஊழியர்களின் கொடுப்பனவு அதிகரிப்பு
- ஓய்வூதியம் பெறுவோரின் கொடுப்பனவு அதிகரிப்பு
- விதவைகள், அநாதைகளுக்கு ஓய்வூதியம்
- பொலிஸாருக்கு உணவு,தங்குமிட கொடுப்பனவு
- இடர் கடன் வசதி
- பெருந்தோட்ட வீடமைப்பு

தொடர்ச்சி P2

# 'பெட்டி'யுடன் வந்து 2 மணிநேர உரை

## எதிரணிக்கும் அவ்வப்போது அழைப்பு



நாட்டின் 78ஆவது வரவு- செலவுத் திட்டத்தை (பட்ஜெட்) சமர்ப்பிப்பதற்காக பாராளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில், திங்கட்கிழமை, பிற்பகல் 2 மணிக்கு கூடியது.

சம்பிரதாய பூர்வமான பட்ஜெட் பெட்டியுடன் சபைக்குள் நுழைந்த நிதியமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை, ஆளும் கட்சியினர் மேசைகளில் தட்டி வரவேற்றனர். அதன்பின்னர் 2024ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றினார். தனது உரையை 12 மணிக்கு ஆரம்பித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இரண்டு மணிநேரம் ஒரே மூச்சில் வாசித்து முடித்தார்.

தொடர்ச்சி P2

# "மக்களுக்கு நிவாரணம் இல்லை"



வரவு- செலவுத் திட்டத்தில் மக்களுக்கான நிவாரணம் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அரச ஊழியருக்கு ஏப்ரல் மாதம் முதல் 10,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படும் என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர், ஓய்வூதியர்களும் 2,500 ரூபாய் கொடுப்பனவை பெறுவதற்கு ஏப்ரல்

தொடர்ச்சி P2



# மண்சரிவில் நால்வர் மாயம்

■ எஸ்.கணேசன்

பலாங்கொடை - கவரங்கேன, வெஹிந்தென்ன பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காணாமல் போயுள்ளதாகவும், அவர்களை மீட்கும் பணியில் பொலிஸார், இராணுவத்தினர், பொது மக்கள் ஆகியோர் ஈடுப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை (12) மாலை பெய்த மழையுடன் கூடிய இந்த மண்சரிவு ஏற்பட்டுள்ளதாகவும் அங்கு 3 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வீடு ஒன்றில் இருந்த தாய், தந்தை மற்றும் இரண்டு மகள்கள் தற்போது காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், இவர்கள் மண் மேட்டின் கீழ் புதையுண்டுள்ளார்களா? அல்லது மண்சரிவுடன் வேறு இடத்திற்குச் சென்றுவிட்டார்களா, என விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடும் மழை காரணமாக அப்பகுதிக்குச் செல்வது சிரமமாக இருந்ததால், அவர்கள் தொடர்பில் குறிப்பிட்ட தகவல்கள் எதுவும் தெரியவரவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், மண்சரிவினால் பாதிக்கப்பட்ட பகுதி மிகவும் செங்குத்தான பிரதேசம் என்பதுடன் மேலும் பல வீடுகளில் உள்ள மக்களை வெளியேற்றப் பாதுகாப்புப் படையினர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



### மயிலத்தமடு–மாதவனை பகுதியில்

# அத்துமீறி குடியேறியோரை வெளியேறுமாறு உத்தரவு

■ வா.கிருஸ்ணா

மட்டக்களப்பு - மயிலத்தமடு மாதவனை பகுதியில் அரச காணியில் அத்துமீறிய குடியேறியவர்களை வெளியேறுமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி அன்வர் சதாத், திங்கட்கிழமை (13) உத்தரவிட்டுள்ளார்.

மட்டக்களப்பு - மயிலத்தமடு மாதவனை பகுதியில் மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அரச காணியில் அத்துமீறிக் குடியேறியதாகத் தெரிவித்து 13 பேருக்கு எதிராக ஏறாவூர் நீதிமன்றில் மகாவலி அதிகார சபையினால் கடந்த 2023.09.22 அன்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

# சி.ஐ.டியில் முறைப்பாடு



விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க, குற்றப் புலனாய்வு திணைக்களத்தில், திங்கட்கிழமை (13) முறைபாடொன்றை பதிவு செய்துள்ளார். ஸ்ரீலங்கா கிரிக்கெட் எதிர்நோக்கியுள்ள பிரச்சினை குறித்து இந்த முறைபாடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# "எங்களுக்கும் ஏமாற்றம்"



வரவு-செலவுத் திட்டத்தில் தனியார் பஸ் தொழிற்சங்கத்திற்கு நிவாரணம் வழங்கப்பட வில்லை என பஸ் சங்கங்கள் தெரிவிக்கின்றன.

வரவு-செலவுத் திட்டத்திற்கு முன்னர் தனியார் பஸ் சங்கங்களுடன் எவ்வித கலந்துரையாடலும் இன்றி இவ்வருட வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# "அம்பிட்டிய தேரருக்கு எதிராக சட்டம் பாயாமை ஏமாற்றம்"

■ நூருல் ஹுதா உமர்



மட்டக்களப்பு விகாராதிபதி அம்பிட்டிய தேரர், தமிழ் மக்களை துண்டுத் துண்டாக வெட்ட வேண்டும், கொல்ல வேண்டும் என்று மிகக் கேவலமான முறையில், மிகமோசமாக பகிரங்கமாகப் பேசியிருக்கிறார். இதனை யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இவருக்கு எதிராக எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அது ஏமாற்றமளிக்கின்றது என்று பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

இதனால், இலங்கையின் ஒட்டுமொத்த தமிழ் சமூகமும் வேதனையில் ஆழ்ந்துள்ளது. தேரரின் இந்த கருத்தை முஸ்லிம்,

தொடர்ச்சி P2

# "சொர்க்கம், நரகத்தை காண்பித்துள்ளார்"



தற்போதைய ஜனாதிபதி பிரார்த்தனை செய்ய வேண்டியவர்களுக்கு பிரார்த்தனை செய்யாமல், கீழ்மட்டப் பிரிவினரின் ஆணையைப் பெற்றுள்ளதாகவும், ஐ.எம்.எப் உடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் வருவாய் இலக்குகளை நிறைவு செய்ய முடியாததால், இரண்டாவது

ஐ.எம்.எப். கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில், ஏனோதானோ என்ற அடிப்படையில் வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது நாட்டு மக்களை ஏமாற்றும் முயற்சி என்றும் வரவு- செலவுத் திட்டத்தில் நரகம் பற்றி பேசினாலும், ஆட்சியாளர்கள் சொர்க்கபுரியில் உள்ளனர் என்றும் உழைக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் திட்டம் இல்லை என்றார்.

வரவு-செலவுத் திட்ட உரையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி:

# பதிவிட்டவருக்கு எதிராக முறைப்பாடு

■ எம்.றொசாந்த்

யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி தொடர்பாக முகநூலில் பதிவிட்ட பல்கலைக்கழக ஊழியர் ஒருவருக்கு எதிராக எதிராக பல்கலைக்கழக பேராசிரியர்கள் இருவரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி தற்பொழுது கொழும்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் கடமையாற்றும் சண்முகநாதன் பிரதீபன் என்ற நபருக்கு எதிராகவே இணைய வழி ஊடாக பொலிஸ் மா அதிபரிடமும் (Tell To IGP), யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# "மக்களுக்கு நிவாரணம் இல்லை"

மாதம் வரை காத்திருக்க வேண்டியுள்ளது எனவும் தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டத்திற்கு முன்னர் பெறுமதி சேர் வரி (VAT) அறிமுகப்படுத்தப்பட்டதால் வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பெறுமதி சேர் வரி காரணமாக அனைத்து பொருட்களின் விலையும் அதிகரிக்கும் எனவும் பேராசிரியர் தெரிவித்துள்ளார். ஏழு இலட்சம் பேரின் மின்சாரம் தற்போது துண்டிக்கப்பட்டுள்ளது. இந்த வரவு- செலவுத் திட்டத்தில் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவில்லை எனவும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

வரவு- செலவுத் திட்டம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# சி.ஐ.டியில் முறைப்பாடு

கணக்காய்வு திணைக்கள அறிக்கையில் வெளியாகியுள்ள விடயங்கள் மற்றும் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் தலைவர் ஷமி சில்வா மற்றும் அவருக்கு விடுக்கப்பட்டுள்ள மரண அச்சுறுத்தல் தொடர்பில் அமைச்சர், குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# "அம்பிட்டிய தேரருக்கு எதிராக சட்டம் பாயாமை ஏமாற்றம்"

சிங்கள சமூகங்கள் வெட்கக்கேடாக நோக்குகிறது. இவ்வாறான வன்மமான பேச்சுக்கள் தடைசெய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

"கடந்த காலங்களிலும் இவ்வாறான வன்மமான பேச்சுக்கள் சிறுபான்மை மக்களுக்கு எதிராகத் தாண்டவமாடியது. இவற்றை இல்லாமலாக்க வன்மமான பேச்சுக்களுக்கு எதிரான சட்டமூலத்தைக் கொண்டு வரவேண்டும். கடந்தகாலங்களில் அது தொடர்பில் ஆலோசனைகள் இடம்பெற்றிருந்தாலும் அவை இன்னும் அமுலுக்கு வராமல் இருப்பது கவலையளிக்கிறது.

அண்மைய மக்கள் எழுச்சிக்குப் பின்னர் இந்த நாட்டில் இனவாதம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. எங்கு ஊழல் நடந்தாலும் சரி அவற்றைத் தட்டிக்கேட்டு இளைஞர்கள் இலஞ்சம் ஊழலில்லாத தேசமாக எமது நாட்டை கட்டியெழுப்ப முயற்சிக்கின்றனர். ஊழலில்லாத அரசாங்கம் அமைக்க மக்கள் இப்போது தயாராகிவிட்டனர்" என்றார்.

33 வருடங்கள் கடந்தும் கூட வடமாகாண முஸ்லிம்கள் தமது வாழ்வியல் உரிமைகளை, வீட்டுரிமைகளை, காணியுரிமைகளை, வாக்குரிமை, கல்வியுரிமை, பொருளாதார உரிமைகள் இழந்து தமது தேவைகளுக்காக புத்தளத்திலிருந்து மன்னாருக்கு செல்லும் பாதை உரிமைகளையும் இழந்து நிற்கும் தறுவாயில் மனித உரிமைகள் தொடர்பில் இந்த நாட்டில் பேசும் மனித உரிமை ஆர்வலர்களுக்கு சரி இந்த நாட்டை ஆளும் அரசாங்கமும் சரி, பாராளுமன்றமும் சரி இந்த அவலநிலையைப் போக்க இன்னும் முன்வரவில்லை. இந்த மக்களின் தேவைகளைச் சரியாக அடையாளம் கண்டு தீர்வை வழங்கவும் அந்த மக்களின் உரிமைகளை மீளப் பெற்றுக்கொடுக்கவும் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று உடனடியாக நிறுவப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# "புரட்சிக்கு ஒன்றிணைக"

- கொழும்பில் தோட்ட வீடுகள்
- நான்கு புதிய பல்கலைக்கழகங்கள்
- அனைவருக்கும் ஆங்கிலம்
- மீண்டும் சுரக்ஷா
- இடம்பெயர்ந்தோருக்கான வீடுகள்
- காணாமல் போனவர்களுக்கான இழப்பீடு
- யாழ்ப்பாண நீர்வழங்கல் கருத்திட்டம்
- பூநகரி நகர அபிவிருத்தி
- பதுளைக்கு இருதய – நுரையீரல் இயக்கமீட்பு அலகு
- பண்டாரவளை பொருளாதார மத்திய நிலையம்
- கிரிக்கெட் அபிவிருத்திக்கு நிதியொதுக்கீடு
- போக்குவரத்துத் துறை டிஜிட்டல் மயம்
- திருகோணமலை நகரை அண்டி அபிவிருத்தி

# "எங்களுக்கும் ஏமாற்றம்"

வரவு-செலவுத் திட்டத்தில் குத்தகை வட்டி குறைப்பு, பஸ்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதி, எரிபொருள் மானியம் உள்ளிட்ட நிவாரணங்களை பஸ் தொழிற்சங்கங்கள் எதிர்பார்த்து இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனியார் பஸ் தொழிற்துறைக்கு விசேட சலுகைகளை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் வரவு-செலவுத் திட்ட யோசனையின் பின்னர் நிதியமைச்சுடன் கலந்துரையாடவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பதிவிட்டவருக்கு எதிராக முறைப்பாடு

இதனடிப்படையில் குறித்த நபரை காங்கேசன்துறையில் உள்ள பொலிஸாரின் தகவல் தொழில்நுட்ப பிரிவு அலுவலகத்துக்கும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கும் விசாரணைக்கு ஆஜராகுமாறு பொலிஸாரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர், சமூக ஊடக வெளியில் நன்கு அறியப்பட்டவர் என்பதுடன் சமூக ஊடகங்கள் மூலம் பல்வேறு ஆக்கப்பூர்வமான தகவல்களைப் பகிர்ந்து வருவதுடன், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அச்சமின்றி சமூக ஊடக பதிவுகள் மூலம் வெளியிட்டு வருகின்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் உள்ளிட்ட இருவர் மேற்கொண்ட முறைப்பாடுகளை அடுத்து அது தொடர்பில், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு விசாரணைகள் ஆரம்பித்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியிருந்தது.

# 'பெட்டி'யுடன் வந்து 2 மணிநேர உரை

பட்ஜெட்டின் முன்னுரை நிறைவில் யோசனைகளை முன்வைத்து உரையாற்றினார்.

அதில், ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தில் முன்மொழியப்பட்ட யோசனைகள் பல உள்ளடக்கப்பட்டிருந்தன. அச்சந்தர்ப்பங்களில் எல்லாம், ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை பெயர் குறிப்பிட்டு அழைத்த ஜனாதிபதி, இந்த யோசனைகளுக்கு உங்களுடைய ஆதரவு தேவை, அதற்கான இணக்கம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரத்ன, மாரிக்கார் மற்றும் கயந்த கருணாதிலக்க ஆகியோரின் பெயர்களை ஜனாதிபதி அவ்வப்போது உச்சரித்துள்ளார்.

# அத்துமீறி குடியேறியோரை வெளியேறுமாறு உத்தரவு

அந்த வழக்குத் தீர்ப்புக்காகத் திங்கட்கிழமை (13) எடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு- மயிலத்தமடு மாதவனை பகுதியில் அத்துமீறிக் குடியேறியதாகத் தெரிவிக்கப்பட்ட 13 பேரும் நீதிமன்றில் ஆஜராகி இருந்தனர். மகாவலி அதிகார சபை சார்பாக மன்றுக்கு அரச சட்டத்தரணி டில்கானி டி சில்வா முன்னிலையாகியுள்ளார்.

குறித்த வழக்கு விசாரணை கடந்த 10ஆம் திகதி நடைபெற்றது. தீர்ப்புக்காக 13ஆம் திகதி திங்கட்கிழமை வரையிலும் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், அதிகாரம் பெற்ற அதிகாரிகளின் எந்த வகையான ஆவணமும் அத்துமீறிக் குடியேறியவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டவர்களினால் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படாததால் மட்டக்களப்பு- மயிலத்தமடு மாதவனை பகுதியில் அத்துமீறிக் குடியேறிய குறித்த 13 பேரையும் வெளியேறுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

மயிலத்தமடு-மாதவனை பகுதியில் அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களை அகற்றுமாறு கோரி அப்பகுதி கால்நடை பண்ணையாளர்கள் 60ஆவது நாளாகவும் போராட்டம் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# "சொர்க்கம், நரகத்தை காண்பித்துள்ளார்"

வரவு- செலவுத் திட்ட உரையின் சில அம்சங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவதற்கு முன்னர் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் பாராளுமன்றத்தின் கௌரவத்துக்கு சவால் விடுக்கப்பட்டுள்ளது எனவும் இது நாட்டு மக்களை ஏமாற்றும் ஊடக நிகழ்ச்சி எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

சுப நேரத்தில் உரையாற்றப்பட்ட வரவு- செலவுத் திட்ட உரையின்படி ஆட்சியாளர்களுக்கு சொர்க்கத்தையும் நாட்டு மக்களுக்கு நரகத்தையும் இந்த வரவு-செலவு திட்டம் காட்டியுள்ளதாவும்,

ஏப்ரல் மாதம் தொடக்கம் அரசாங்கத்திடம் பணம் இல்லை என்பதால் இதனை நம்பி ஏமாற வேண்டாம் என கேட்டுக் கொண்ட எதிர்க்கட்சித் தலைவர், போலி வரவு- செலவுத் திட்டங்களை முன்வைத்து பௌத்தத்தை கேவலப்படுத்தி மக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்க வேண்டாம் எனவும் தெரிவித்தார்.

# "கடல் வளங்களின் பாதுகாப்பான பயன்பாட்டை உறுதிப்படுத்தவும்"

யது பாஸ்கரன்

தமக்கான எல்லைக்குள் கடல் வளங்களின் பாதுகாப்பான பயன்பாட்டை அந்தந்த கடற்றொழிலாளர் அமைப்புக்களே உறுதிப்படுத்த வேண்டும் எனக் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. மோகனகுமார் தெரிவித்தார்.

பளை பிரதேசத்திற்குட்பட்ட கிளாலி கடற்றொழிலாளர் கிராமிய அமைப்புக்கான சந்திப்பு தொழிற் சங்க மண்டபத்தில் திங்கட்கிழமை(13) நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பூநகரி சங்குப்பிட்டி பாலத்தை அண்டியுள்ள பகுதிகளில் குடாநாட்டு மீனவர்கள் வலைகளை இடை மறித்துக் கட்டுவதால் தமது தொழில் பாதிக்கப்படுவதாகவும் அதனைத் தடுத்து நிறுத்த கோரி கிளாலி பகுதி மீனவர்களால் இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

வெளி மாவட்ட தொழிலாளர்களால் உள்ளூர் கடல்வள பாதிப்பின் விளைவுகளைக் கவனத்தில் எடுத்து உரையாற்றிய உதவி பணிப்பாளர் மேலும் தனது உரையில்;

இதில் தனிப்பட்ட உறவுகள் நட்புகளை நாம் கவனத்தில் கொண்டால் கிராமத்துக்கான கடல் வளத்தை நாம் பாதுகாக்க முடியாமல் போய்விடும் என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கடற் தொழிலாளர் சங்கங்களை வலுவூட்டி கூட்டாக முயற்சிகளைத் தொடர வேண்டும் என்பதில் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார்.

இதனைக் கவனத்தில் எடுத்து ஒரு பிரச்சினைக்காகக் கூட்டாக முடிவெடுத்தால் அது அனைவருக்குமான தீர்மானமென்பதைக் கவனத்தில் எடுத்து ஒற்றுமையுடன் செயற்படுவதில் நாம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுமென அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

இது விடயத்தில் யாழ் மாவட்ட உதவி பணிப்பாளரதும் ஆலோசனையைக் கவனத்தில் எடுத்து மேற்கொண்ட தீர்மானத்துக்கு அமைவாகக் குறித்த இடத்தை அடையாளப்படுத்தி வலைகள் கட்டுவதைத் தவிர்க்க வேண்டும் எனவும் தீர்மானமாக அறிவிக்கப்பட்டது.

சங்கத்துக்கான திரட்டு நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடாகக் கிலோ மீனுக்காகச் சங்கத்துக்கு நிதியைப் பெற்றுக் கொள்ளல் அதற்கான ஏற்பாடாக மீன் நிறுவையை சங்கம் செயற்படுத்துவது மற்றும் தனியார் வர்த்தகர்களின் மேலாண்மைக்குப் பதில் தொழிலாளர் சங்கம் மீன் சந்தைப்படுத்தலைக் கவனத்தில் கொள்வதன் அவசியமும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# முள்ளிவாய்க்கால் தூபியுடன் தொடர்புபடுத்தி விசமப் பிரசாரம்

## பேராசிரியர் வேல்நம்பி தெரிவிப்பு

பு.கஜிந்தன்

முகநூல் நபர் ஒருவர் விசாரணைகள் இருந்து தப்புவதற்காகவும் தனக்கான ஆதரவை திரட்டி கொள்வதற்காகவும் யாழ்ப்பாண பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் தூபி தொடர்பில் சமூக ஊடங்களில் விசமப் பிரசாரம் மேற்கொள்ளப்படுவதாக யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் வேல் நம்பி தெரிவித்தார்.

சமூக ஊடகங்களில் யாழ்ப்பாணம் முள்ளிவாய்க்கால் தொகுதி தொடர்பில் பேராசிரியர் வேல்நம்பியை தொடர்புப்படுத்தி வெளி வந்த செய்தி தொடர்பில் அவரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் நபர் ஒருவர் தனது முகநூல் பக்கத்தில் எனது அனுமதியின்றி எனது புகைப்படத்தைப் பிரசுரித்து உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்டிருந்தார்.

குறிந்த செய்தி தொடர்பில் முகநூல் நபருக்கு எதிராக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தேன் என தெரிவித்தார்.

# பட்ஜெட் டீ இல்லை பட்ஜெட் பகல்போசனம்

வரவு- செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் நிதியமைச்சர், அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்கு பட்ஜெட் டீ வழங்குவது வழமையாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் என்றவகையில் 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தைப் பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (13) சமர்ப்பித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதற்கு முன்னர் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை 2022 ஆம் ஆண்டு முன்வைத்தார். அன்றையதினம் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக பட்ஜெட் டீயைக் கூட வழங்கவில்லை.

எனினும், 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தைப் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்த நிதியமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பட்ஜெட் டீக்கு பதிலாக பட்ஜெட் பகல் போசனத்தை வழங்கியிருந்தமை விசேட அம்சமாகும்.

# 2024 பட்ஜெட் முன்மொழிவுகள்...

### 1.அதிகரிப்பு
வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபாய் 10,000 அதிகரிப்பு
ஏப்ரலில் இருந்து மாத சம்பளத்தில் சேர்ப்பு
ஜனவரி- மார்ச் நிலுவை ஒக்டோபரில் இருந்து 6 மாதங்களுக்கு வழங்கப்படும்.

### 2.ஓய்வூதியம்
ஓய்வூதியம் பெறுவோரின் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு 2,500 ரூபாயால் அதிகரிப்பு. 2024 ஏப்ரல் மாதம் முதல் அமுல்

### 3.விதவைகள் மற்றும் அநாதைகளுக்கு ஓய்வூதியம்
விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் 2024 ஏப்ரல் முதல் அனைத்து சேவைப் பிரிவினருக்கும் 8 சதவீதமாக அதிகரிப்பு

### 4.உணவு , தங்குமிட கொடுப்பனவு
பொலிஸ் சேவை அலுவலர்கள் தூர இடங்களுக்கு கடமைக்காக சென்று வருகின்ற போது வழங்கப்படும் பிரயாணக் கொடுப்பனவுக்கு பதிலாக மூன்று பொலிஸ் அலுவலர் குழுக்களுக்கு பொருத்தமான சீராக்கத்துடன் உணவு மற்றும் தங்குமிட கொடுப்பனவு

### 5.இடர் கடன் வசதி
அரச ஊழியர்கள் எதிர்நோக்கும் எதிர்பாராத மற்றும் அவசர நிலமைகளின் போது வழங்கப்படும் இடர் கடனுக்கான தகைமை சில வரையறைகளுக்கு உட்படுத்தப்பட்டது. 2024 ஜனவரி 01 முதல் அனைத்து அரச ஊழியர்களுக்கும் கடந்த ஆண்டுகளைப் போலவே இடர் கடன் வசதி.

### 6.சேவையினை உறுதிப்படுத்தல்
பல்வேறு அரசாங்க நிறுவனங்களில் தற்காலிக திட்டங்களின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பல ஊழியர்களது சேவை இதுவரை நிரந்தரமாக்கப்படவில்லை. 180 நாட்களுக்கு அதிக காலம் சேவை புரிந்த அத்தகைய அமைய ஊழியர்களை அரசாங்கத்தின் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக நிரந்தர ஊழியர்களாக இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை.

### 7.அஸ்வெசும நிகழ்ச்சித்திட்டம்
அஸ்வெசும நிவாரண நிகழ்ச்சித்திட்டத்திற்காக முன்னைய வருடங்களில் 60 பில்லியன் ரூபாய் செலவிடப்பட்டது. அது இப்பொழுது 250 பில்லியன் ரூபாய் வரை உயர்ந்துள்ளது. அத்திட்டம் 2024 இலும் நீடிக்கும் இதன்மூலம் 2 மில்லியன் பயனாளர் குடும்பங்களுக்கு நிவாரணம்.

### 8.அதிகரித்தது உதவிதொகை
மாற்றுத்திறனாளிகள், சிறுநீரக நோயாளிகளுக்கான கொடுப்பனவு 2,500 ரூபாயால் அதிகரிப்பு. முதியோர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு ரூபா 1,000 ஆல் அதிகரிப்பு
காத்திருப்போர் பட்டியலில் இருப்போரும் ஏற்கனவே நிதி உதவி பெறும் பயனாளிகளும் 2024 ஆம் ஆண்டு முதல் பயனாளிகள் பட்டியலில் சேர்க்கப்படுவர்.
கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ரூபாய் 4,500 மாதாந்த தொகை வழங்கும் முறைமையில் அதிகளவு குறைபாடும் பலவீனங்களும் எம்மால் அவதானிக்கப்பட்டுள்ளது. இக்குறைபாடுகளை நீக்கி இந்நிகழ்ச்சித்திட்டத்தினை மிகவும் ஒழுங்குபடுத்துவதற்கு ரூபா 10 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

### 9.சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள்
சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு மேலும் சக்தியினையும் தைரியத்தையும் வசதிகளையும் வழங்குவதற்கு முடியும். இந்நோக்கத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் ரூபா 30 பில்லியனை சலுகைக் கடன் வசதி அடிப்படையில் நாம் அறிமுகப்படுத்துவோம். இந்த நிகழ்ச்சித்திட்டத்தை வலுப்படுத்துவதற்காக ரூபா 20 பில்லியனை ஒதுக்கீடுசெய்யப்படும்.

### 9.காணி உரித்து நிகழ்ச்சித்திட்டம்
நூறு வருட காலம் கடந்தும் இந்த விவசாயிகளுக்கு காணிகளின் முழுமையான உரித்துரிமையினை வழங்குவதற்கு அரசாங்கத்தினால் எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை. தேவையான சட்ட ரீதியான செயன்முறைகளைப்பின்பற்றி இவ்வாறான அனுமதிப்பத்திரங்களுக்கு பதிலாக விவசாயிகளுக்கு எவ்வித தடையுமற்ற உறுதிகளை வழங்க 2 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

### 10.நகர வீட்டு உரித்துரிமை
நகரத்திலுள்ள வறியவர்களுக்கு வீடுகளின் உரித்தினை வழங்குவதன் மூலம் 2024 இல் 50,000 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நான் விரும்புகின்றேன். இந் நோக்கத்திற்காக 3 பில்லியன் ரூபாய் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு. இத்திட்டம் நிறைவு செய்யப்படும் பொழுது இந்நாட்டு மக்களில் 70 சதவீதமானவர்கள் காணி மற்றும் வீட்டு உரிமையாளர்களாக மாறுவர்.

### 11.பெருந்தோட்ட வீடமைப்பு
பெருந்தோட்டப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் வீட்டு உரிமை பெறாதவர்களாவர். எனவே, அவர்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கு காணி உரித்தினை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். இதன் ஆரம்ப கட்டமாக 4 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்வதற்கு எதிர்பார்க்கின்றேன்.

### 12.பிம்சவிய
பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 12 மில்லியன் காணித்துண்டுகள் மத்தியில் தற்போது வரை ஒரு மில்லியன் காணித்துண்டுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சித்திட்டத்தினை விரைவுபடுத்தும் பொருட்டு தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக 600 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு..

### 13.பன்முகப்படுத்தப்பட்ட பட்ஜெட்
பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தினை நாம் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளோம். இதற்காக 11 பில்லியன் ரூபாயட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு ஊடாக வழங்கப்படும்.

### 14.'கந்துரட தஷகய'
மலைநாட்டில் கிடைக்கக்கூடிய பொது உட்கட்டமைப்பு மற்றும் சேவைகள் பல்வேறு காரணங்களினால் வளங்களின் பகிர்வில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. சப்ரகமுவ, மத்திய மாகாணங்கள், பதுளை, காலி, மாத்தறை, களுத்துறை மற்றும் குருநாகல் மாவட்டங்களை உள்ளடக்கிய மலைநாட்டுப் பிரதேசத்தைச் சேர்ந்த 89 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளக்கியதாக 10 வருட பல்நோக்கு கிராமிய மற்றும் சமுதாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்றினை 2024 வருடத்திலிருந்து செயற்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். இந்நோக்கத்திற்காக 2024 ஆம் வருடத்திற்கு ரூபா 10 பில்லியனை ஒதுக்கீடு.

### 15.அபிவிருத்திக் கருத்திட்டம்
அரசாங்கத்தின் மூலதனச் செலவினம் பொருளாதார வளர்ச்சி மற்றும் மீட்சிக்கு அர்த்தமுள்ள பங்களிப்பைச் செய்ய, அரசிறை மற்றும் படுகடன் நிலைத்தன்மையின் முக்கிய அங்கமாகும். இதற்கு 2024 பட்ஜெட்டில், மூலதனச் செலவின ஒதுக்கீட்டை 1,260 பில்லியன் ரூபா வரை அதிகரிப்பு.

### 16.கிராமியப் பாதை
கடந்த சில வருடங்களாக கிராமிய பாதைகளின் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவத்தினை முறையாக முன்னெடுப்பதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படவில்லை. சிதைவடைந்து காணப்படுகின்ற அத்தகைய பாதைகளை புதுப்பிப்பதற்காக 10 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

### 17.இயற்கை அனர்த்தம்
இயற்கை அனர்த்தங்களினால் சேதமடைந்த வீதிகளை புனரமைப்பதற்கு 2,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

### 18.கல்வி
நவீன யுகத்திற்கு பொருத்தமான கல்வியினை அறிமுகப்படுத்துவதன் வாயிலாகவே நாட்டின் எதிர்காலத்தை நிலை நாட்ட முடியும். எமது நாட்டில் காணப்படுவது மனப்பாடம் மூலம் உருவாகும் காலங்கடந்த கல்வி முறையானது. இம்முறைமையின் கீழ் ஆக்கத்திறன் மிக்கோரை உருவாக்க முடியாது. அதேபோன்று இலவசக் கல்வியின் பிரதிலாபம் முழுமையாக மக்களுக்கு கிடைப்பதில்லை. உயர்தரம் சித்தியடையும் அனைத்து மாணவர்களுக்கும் பல்கலைக்கழக படிப்பினை எவ்வித தாமதமின்றி பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும்.

### 19.நான்கு புதிய பல்கலைக்கழகங்கள்
நடைமுறை தொழில்நுட்பத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியினை கவனத்திற்கொண்டு நாம் புதிய பல்கலைக்கழகங்கள் நான்கினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்போம். சீதாவக்க, கொத்தலாவல, முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப காலநிலை மாற்றத்திற்கான சர்வதேச பல்கலைக்கழகம் நிறுவப்படும்.
அதேபோன்று தற்பொழுது தொழிற்பட்டு வருகின்ற வியாபார முகாமைத்துவ தேசிய கல்லூரி, இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம், ஹொரைசன் வளாகம், றோயல் இன்ஸ்ரிடியூட் ஆகிய தனியார் உயர்கல்வி நிறுவனங்களை பல்கலைக்கழகங்களாக மாற்ற யோசனை.
அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளும் பல்கலைக்கழங்களை ஆரம்பிப்பதற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் மாகாண சபைகளின் மூலமும் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்படும்.

### 20.கல்விக்கான பல்கலைக்கழகம் ஒன்றைத் தாபித்தல்
தேசியக் கல்விப் பீடங்கள் 19 இனை இணைத்து கல்விப் பல்கலைக்கழகத்தை தாபிப்பது கல்வி அபிவிருத்திக்கான காலத்தின் தேவையாகும். தற்போதுள்ள கல்விப் பீடத்தில் 4 வருட கற்கைநெறியை பூர்த்திசெய்த பின்னர், தொடர்புடைய தரங்களுக்கு இணங்க இந்த புதிய பல்கலைக்கழகங்கள் மூலம் அந்த மாணவர்களுக்கு கல்வி இளமானி பட்டத்தை வழங்குவதற்கு நான் முன்மொழிகிறேன். இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2024 ஆம் ஆண்டிற்காக 1 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

### 21.புதிய தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்
இந்தியாவில் சென்னை நகரில் அமைந்துள்ள சென்னை இந்திய தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் கீர்த்திமிக்க கல்வி நிறுவனமொன்றாகும். அது தொழில்நுட்பவியல் கல்வியில் அடிப்படை மற்றும் வணிக ஆராய்ச்சிகள், புத்தாக்கங்கள், தொழில்முயற்சி மற்றும் தொழில்நுட்ப துறைகளில் பிரபல்யமாக பெயர் பெற்றதாகும். சென்னை இந்திய தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக வழிகாட்டலுடன் புதிய தொழில்நுட்ப பல்கலைக்கழகமொன்றை நாம் ஆரம்பிப்போம். இதற்கு இந்தியா எமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கும்.

### 22.அரச பல்கலைக்கழகங்கள்
புதிய சகாப்தத்திற்கு ஏற்றவாறு மேம்படுத்தும் திட்டத்தை மாநில பல்கலைக்கழகங்கள் செயல்படுத்தி வருகின்றன. இது பேராதனை பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பிக்கிறது.
2042 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நூற்றாண்டு விழாவை இலக்காகக் கொண்டு பேராதனைப் பல்கலைக்கழகம் நீண்ட கால திறன் மற்றும் சேவை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு, இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

### 23.அரசசார்பற்ற பல்கலைக்கழகங்கள்
அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களை ஒழுங்குபடுத்துவதற்கான சக்திவாய்ந்த சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் தொகுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, உலகிலுள்ள எந்தவொரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனமும் இலங்கையில் பல்கலைக்கழகங்களை நிறுவ அனுமதிக்கிறோம். இதன் மூலம் உயர் தரப் பரீட்சையில் சித்தியடையும் ஒவ்வொரு மாணவனும் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறுவதற்கும், வெளிநாட்டுக் மாணவர்கள் மூலம் அந்நியச் செலாவணியைப் பெறுவதற்குமான வாய்ப்புகளை உருவாக்கும்.

### 24.மாகாண சபைகளுக்கான தொழிற்கல்வி
ஒன்பது மாகாண சபைகளிலும் மத்திய அரசாங்கத்தின் கீழ் இயங்கும் தொழிற் கல்வி நிறுவனங்களை கையளிப்பதற்கும் மாகாண சபைகளில் தொழிற் கல்விக்கான மாகாண சபைகளை நிறுவுவதற்கும் நான் முன்மொழிகிறேன். எதிர்காலத்தில், தொழிற்கல்வி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கும், உரிய முறையில் மாகாண சபைகள் மூலம் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி செயல்பாடுகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கும் தேவையான வழிகாட்டுதல்கள் மட்டுமே அரசாங்கத்தால் வழங்கப்படும். இந்த நிறுவனங்களுக்கு 2024 ஆம் ஆண்டிற்கு 450 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

### 25.தகவல் தொழில்நுட்ப பயிற்சி
தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புபட்ட தனியார் நிறுவனங்களுடன் இணைந்து வேலை வாய்ப்பை எதிர்பார்க்கும் பட்டதாரிகளுக்கு ஆகக்குறைந்தது 6 மாதங்களுக்குள் பயிற்சி மற்றும் சேவை அனுபவம் வழங்கப்படும். இக்காலப்பகுதியில் அவர்களுக்கு ரூபாய் 45,000 மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும். அதில் 25,000 ரூபாயை அரசாங்கம் பொறுப்பேற்கும். மீதி 20,000 ரூபாயை குறித்த தனியார் நிறுவனத்தினால் வழங்கப்படும்.

### 26.இளைஞர் மற்றும் வயதுவந்தோர் கல்வி
**பல்கலைக்கழக கல்விக்கு தகைமை பெறாத இளைஞர் சமூகத்திற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுதல் வேண்டும். அதேபோன்று, அரசாங்க சேவை மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றுகின்ற வயதுவந்தோருக்கு புதிய அறிவினை பெற்றுக்கொள்வதற்கு தேவையான பின்னணியும் தயாரித்தல் வேண்டும். இந்த நடவடிக்கைகளுக்காக இலங்கை மன்றக் கல்லூரிக்கு 150 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.**

### 27.அனைவருக்கும் ஆங்கிலம்
2034 ஆம் ஆண்டளவில் ஆங்கில மொழி அறிவை அனைவருக்கும் வழங்குவது இந்த நிகழ்ச்சிதிட்டத்தின் நோக்கமாகும். இது ஒரு பத்தாண்டு நிகழ்ச்சி திட்டத்தை ஆரம்பிக்க 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

### 28.சுரக்ஷா
2016 இல் அறிமுகப்படுத்தப்பட்டு தற்பொழுது நடைமுறையில் இல்லாத மாணவர் காப்புறுதித் திட்டத்தினை மீள அறிமுகம். அனைத்து அரசாங்கப் பாடசாலைச் சிறுவர்களும் மீண்டும் இந்தக் காப்புறுதிக் காப்பீட்டினைப் பெற்றுக்கொள் முடியும்.

### 29.மருந்துப் பொருட்கள்
இந்தவகையில் மருந்துப் பொருட்கள் கொள்வனவுக்கான பிரத்தியேக வழிகாட்டல்களை வழங்கும் வகையில் விஷேட நிறுவனமொன்று தாபிக்கப்படுவதுடன், அரசாங்கத்தின் மருந்துக் கொள்வனவுச் செயன்முறை தொடர்பான விபரமாக ஆராயப்படும்.

### 30.மருத்துவ மற்றும் சுகாதார ஆராய்ச்சி
இலங்கையின் நவீன மருத்துவ அறிவு மற்றும் தொழில்நுட்ப தேவையினை ஈடுசெய்வதற்கு ஆய்வுகூடங்களின் ஆற்றலினை அதிகரிக்க 75 மில்லியாய் செலவீடு. தேசிய மருத்துவ தரப்பரிசீலனை ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்துவதற்கு மூன்று வருட திட்டத்தின் கீழ் அடுத்த வருடத்திற்கு 25 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

### 31.பதுளைக்கு இருதய – நுரையீரல் இயக்கமீட்பு அலகு
ஊவா மாகாணத்திலுள்ள எந்தவொரு வைத்தியசாலையிலும் இருதய நுரையீரல் இயக்கமீட்பு வசதிகள் இல்லை. நாம் இந்தக் குறைபாட்டினை நிவர்த்தி செய்கிறோம். பதுளை போதனா வைத்தியசாலையில் இருதய நுரையீரல் புத்துயிர் பெறும் பிரிவை நிறுவுவதற்கும் அவற்றுக்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

### 32.மருத்துவ அலுவலர்களுக்கான பதவி உயர்வு
விசேட வைத்தியர்களின் மேலதிக பணிக்காக தற்போது மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவு முறைக்குப் பதிலாக கொடுப்பனவொன்றாக அந்தக் கொடுப்பனவை செய்யும் வாய்ப்புக்கள் குறித்தும் நாம் ஆராய்கின்றோம்.

### 33.இலங்கையர்களினால் குணப்படுத்துதல்
பாரம்பரிய வைத்திய மருந்துப்பொருட்களினால் தயாரிக்கப்பட்ட உள்நாட்டு மருந்துகள், துணை உணவுகள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் தாவர மூலப்பொருட்களுக்கு சர்வதேச ரீதியில் கேள்வி நிலவுகின்றது. இந்த வாய்ப்பை உரிய விதத்தில் பயன்படுத்திக்கொண்டால் மென்மேலும், சர்வதேச சந்தையை விரிவுபடுத்திக்கொள்வதற்கு எமக்கு வாய்ப்புக் கிடைக்கும். சுகாதார அமைச்சின் சுதேச மருத்துவப் பிரிவு மற்றும் ஆயுர்வேத மருந்துக் கூட்டுதாபனம் ஆகியவற்றின் மேற்பார்வையின் கீழ் அவ்வாறான முதலீடுகளுக்கு தேவையான வசதிகளை வழங்க முன்மொழிவு
சுற்றுலா பயணிகளிக்கு சுதேச மற்றும் ஆயுர்வேத நலன்களை வழங்குவதற்கும் 'இலங்கையில் சுகாதாரம் - இலங்கையர்களினால் குணப்படுத்துதல்' என்ற எண்ணக்கருவுக்கு இணங்கியதாக சுற்றுலா ஹோட்டல்கள், ஓய்வு விடுதிகள் ஆகியவற்றில் சிகிச்சை நிலையங்களை அமைப்பதற்கு திட்டங்கள் முன்னெடுக்கப்படும். இதற்காக 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு .

### 34.நவீனமயப்படுத்தல்
புதிய பொருளாதாரத்தின் கீழ் விவசாயத்தினை போட்டி மட்டத்திற்கு உயர்த்துதல் வேண்டும். பெறுமதி சேர்க்கப்பட்ட விவசாய உற்பத்தியினை உருவாக்கதல் வேண்டும். ஏற்றுமதியினை இலக்காகக் கொண்டு விவசாயத்தினை நவீனமயப்படுத்துதல் வேண்டும்.
விவசாய நவீனமயப்படுத்தல் கருத்திட்டம், சிறிய தோட்ட உரிமையாளர் விவசாய பங்குபற்றல் முன்னெடுப்புகள் மற்றும் பயிர் பல்வகைத்தன்மை என்பவற்றிற்காக இந்த வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 35.நவீனமயப்படுத்தல் சபை
ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்டம் 2023/24 பெரும்போகத்திலிருந்து செயற்படுத்தப்படும். இன் நோக்கத்திற்காக 2,500 ரூபாய் ஒதுக்கீடு. நெல் உற்பத்தியினை ஹெக்டயர் ஒன்றிற்கு 3.5 இலிருந்து 8 தொன் வரை அதிகரிப்பதாகும். இதற்கு மேலதிகமாக பாரியளவிலான விவசாய நடவடிக்கைகளுக்காக அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், மகாவலி ஏ மற்றும் பீ வலயங்களிலுள்ள ஏனைய அரச காணிகளில் 3 இலட்சம் ஏக்கர்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

### 36.கடற்றொழிற்துறை
மீன்பிடி துறைமுகங்களை நிர்வகிப்பதில் தனியார் துறையுடன் இணைந்து அரசு நடவடிக்கை எடுக்கும். விரயத்தைக் குறைப்பதற்கும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் முக்கியமானதாகக் காணப்படும் நவீன சேமிப்பகம் உள்ளடங்களாக இத்துறையில் மேலதிக முதலீடுகளைச் செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.
நாட்டின் மொத்த நன்னீர் மீன் உற்பத்தியில் ஏறக்குறைய 35 சதவீதம் வடக்கு கடல் பிர தேசத்தில் மேற்கொள்ளப்படுகிறது. இதற்குத் தேவையான வசதிகளை மேம்படுத்துவதற்காக 500 ரூபாய் மில்லியனை ஒதுக்கீடு.

### 37.பால் உற்பத்தி
பால் உற்பத்தித்துறை மதிப்புச் சங்கிலியில் உள்ளவர்களின் நிதித் தேவையை எதிர்கொள்வதற்கு மேல்நிதியிடல் கடன் வழிகளில் நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழிவு.
தேசிய கால்நடை வள அபிவிருத்திச்சபைக்குச் சொந்தமான விவசாயப் பண்ணைகள் அனைத்தையும் வினைத்திறனுடன் பயன்படுத்தி தனியார்துறை பங்களிப்புடன் தினசரி பால் உற்பத்தி நாளொன்றுக்கு 20 மில்லியன் லீற்றர் வரை அதிகரிக்க முயற்சி.

### 38.கொழும்பில் தோட்ட வீடுகள்
கொழும்பு நகரிலுள்ள தோட்டக் காணிகளில் பெரிய வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களை நிர்மாணிக்கும் பொறுப்பை எமது நிர்மாணத்துறைக்கு வழங்குகிறோம். அந்த காணிகளை அவர்களுக்கு இலவசமாக வழங்குகிறோம். குறித்த தோட்டத்தில் வசிக்கும் மக்களுக்கு புதிய வீடுகளை வழங்குவது மட்டுமே அவர்கள் நிறைவேற்ற வேண்டிய ஒரே நிபந்தனையாகும். அக்குடும்பங்கள் குறித்த வீட்டுத் தொகுதியில் வீடுகளை கோறினால் அவர்களுக்கு அங்கு வீடு வழங்கப்படும். அவர்கள் வேறு இடங்களில் வீட்டுக் கோறிக்கையினை முன்வைக்கும் போது குறித்த கோறிக்கையினை நிர்மாண நிறுவனம் நிறைவேற்ற வேண்டும்.

### 39.வழங்கல்
இந்தியாவுடன் இலங்கை நில உறவுகளைப் பேணிக்கொள்ளும் என நம்புகிறோம். தென்மேற்கு இந்தியாவின் விநியோகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், தென்கிழக்கு இந்தியாவின் விநியோகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு திருகோணமலை துறைமுகத்திற்கும் கொழும்புத் துறைமுகம் பயன்படும் என்பது எமது நம்பிக்கை.
மேற்கு முனையம் மற்றும் 2030 ஆம் ஆண்டுக்கு பின்னர் எதிர்பார்க்கப்படும் கொழும்பு வடக்கு துறைமுகம் உருவாக்கப்பட்ட பின்னர் கொழும்பு துறைமுகத்தின் திறன் மேம்படும். திருகோணமலை துறைமுகமும் அபிவிருத்தி செய்யப்படுகிறது. இதன் மூலம் தென்னிந்திய பிராந்தியத்தில் விரைவான வளர்ச்சி மற்றும் தொழில்மயமாக்கலின் பலன்களை இலங்கை அனுபவிக்க முடியும். இலங்கையை பிராந்திய வசதி ஏற்பாட்டு மையமாக உயர்த்துவதே எமது இறுதி இலக்காகும்.

### 40.மகளிர் வலுவூட்டுகை
ஆண் பெண் பால் வேறுபாட்டினை அடிப்படையாகக் கொண்டு வரவுசெலவுத்திட்டத்தினை தயாரிப்பதனை அறிமுகப்படுத்தல் மற்றும் தொடர்புடைய சட்டவாக்கங்களை தயாரிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன். பெண்களை வலுவூட்டுகின்ற சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

### 41.நெசவுக் கைத்தொழில்
நெசவுக் கைத்தொழிலில் ஈடுபடும் பெண்கள் மற்றும் இளம் சமுதாயம் பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்காக விசேட நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

### 42.இடம்பெயர்ந்தோருக்கான வீடுகள்
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்நாட்டு முரண்பாடுகள் முடிவுக்கு வந்து 14 வருடங்கள் கடந்துள்ள போதிலும், அந்தப் பிரதேசங்களில் இன்னும் வீடற்ற குடும்பங்கள் இருக்கின்றன. இந்த ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் இவர்களின் மீள்குடியேற்ற தேவைகளை நிவர்த்தி செய்ய ரூபாய் 2,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், மேலதிக நிதி ஒதுக்கீடாக வீடமைப்புத் திட்டத்தை விரைவுபடுத்தவும், மீதமுள்ள வீடற்ற குடும்பங்களுக்கு அத்தியாவசிய நிவாரணங்களை வழங்கவும் 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

# 2024 பட்ஜெட் முன்மொழிவுகள்...

### 47.காணாமல் போனவர்களுக்கான இழப்பீடு

உள்ளக மோதலினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமல் போன 181 நபர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஏற்கனவே இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் மேலும் 170 பேருக்கு இழப்பீடு வழங்கப்படவுள்ளது. சமர்ப்பிக்கப்பட்ட இழப்பீட்டுக் கோரிக்கைகளில், 6,300 நிகழ்வுகளுக்கான பூர்வாங்க பணிகள் முடிக்கப்பட்டுள்ளதுடன் ஒதுக்கீட்டுச் சட்டத்தில் இருந்து ஏற்கனவே 1,500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இழப்பீடு வழங்குவதை விரைவுபடுத்த 1,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

### 48.யாழ்ப்பாண நீர்வழங்கல் கருத்திட்டம்

யாழ்ப்பாண பிரதேசத்தில் குடிநீர்ப் பிரச்சினை பல வருடங்களாக தீர்க்கப்படாதிருப்பதுடன் வெற்றிகரமான கருத்திட்டமெதுவும் இதுவரை செயற்படுத்தப்படவில்லை. தற்பொழுது காணப்படும் சிக்கலான பல்வகை நீர்ப் பிரச்சினைகளுக்கு தீர்வொன்றாக ஏற்கனவே சாத்தியவள ஆய்வு நிறைவு செய்யப்பட்டுள்ள பாலி ஆறு நீர் கருத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். இக்கருத்திட்டத்தின் ஆரம்ப வேலைகளை 2024 இன் முதல் அரை ஆண்;;டில் ஆரம்பிப்பதற்கு நான் எதிர்பார்க்கின்றேன். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப வேலைகளுக்கு 2024 வருடத்தில் 250 மில்லியனை ரூபாய் செலவிடுவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### 49.பூநகரி நகர அபிவிருத்தி

யாழ்ப்பாணம்-மன்னார் பிரதான வீதியில் சங்குப்பிட்டி பாலத்திற்கு அருகில் அமைந்துள்ள பூனகரி நகரம் சுற்றுலாத் துறைக்கு ஒரு முக்கிய நகரமாக அமைந்துள்ளது. இதன் அபிவருத்திக்காக ரூபா 500 மில்லியன் ஒதுக்குவதற்கு நான் முன்மொழிகிறேன்.

### 50.பண்டாரவளை பொருளாதார மத்திய நிலையம்

பண்டாரவளை பொருளாதார மத்திய நிலையத்தினை நிர்மாணித்தல் மற்றும் அதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், பண்டாரவளை மாநகர சபை மற்றும் அரசாங்கத்தின் இணைந்த நிதியளிப்புக் கருத்திட்டமாக ரூபா 250 மில்லியனை நாம் வழங்குவோம்.

### 51. கலாசாரம்

பல வருடங்களாக எமது கலாசாரம் பல்வேறு வரையறைகளுக்கு உட்பட்டுள்ளது. கலாசாரம் என்பது அரச விருது வழங்கும் நிகழ்வு என்று மாத்திரம் பலர் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். நாட்டின் கலாசாரத்தினை போசிப்பதற்கும், பெறுமதியான மரபுரிமைகளை எதிர்கால சந்ததியினருக்கு விட்டுச்செல்வதற்கும் முறையான செயற்பாடுகள் எதுவும் இல்லை. பல்வேறுபட்ட நெருக்கடிகள் மற்றும் சவால்களை எதிர்நோக்கிய போதும் எமது கலாசார கருத்திட்டங்கள் பல இந்த வரவுசெலவுதிட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்றது.

### 52.கண்டி பௌத்த கலாசார நூதனசாலை

ஆராய்ச்சி செயற்பாடுகள் மற்றும் கலாசார மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக இலங்கை பௌத்த நூதனசாலை ஒன்றினைத் தாபிப்பதற்கு நான் எதிர்பார்க்கின்றேன். பல்வேறு நாகரீகங்களுடன் தொடர்பான அத்தகைய நூதனசாலைகள் பல்வேறு நாடுகளில் சிறப்பாக இயங்கிவருவதுடன் அத்தகைய நிலையங்களினால் கவரப்பட்ட ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் அதனை தரிசிப்பர் என்பது அறியப்பட்ட விடயமாகும். இதற்கான நிர்;மாணப் பணிகள் பல கட்டங்களாக மேற்;கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுவதுடன், அதன் நிர்மாணப் பணிகளுக்காக 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

இந்த செயற்திட்டத்தின் மூலம் இலங்கையினை பௌத்த சுற்றுலா மையமொன்றாக மாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 53.கிரிக்கெட் அபிவிருத்தி

இலங்கையின் கிரிக்கெட் தற்போது நிறுவன நெருக்கடிகளுக்கும் திறமையின்மையினாலும் பாதிக்கப்பட்டுள்ளதனை நாம் அறிவோம். நாட்டின் பாடசாலை கிரிகட் அபிவிருத்தியினை மேம்படுத்தும் நோக்கத்துடன் மாகாண மட்டத்தில் கிரிக்கெட் வீரர்களுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கு இந்த வரவுசெலவுத்திட்டத்தில் 1.5 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இந்த நிதி ஏற்பாடு வழங்கப்படுவது வசதி குறைந்த பாடசாலைகள் மற்றும் மாகாணங்களுக்கு முக்கியத்துவம் வழங்குவதற்காகும்.

### 54.போக்குவரத்துத் துறை

2024 ஆம் ஆண்டில் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் டிஜிட்டல்மயமாக்கப்படும். லங்கை போக்குவரத்து சபையுடன் இணைந்து மேல் மாகாணத்தில் 200 மின்சாரப் பேருந்துகளை இயக்குவதற்கான முன்னோடிக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டியில் வாகனங்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்து நெரிசலை நீக்கி ரயில்கள், பேருந்துகள் மற்றும் ஏனைய உயர் வாகனங்களை ஒருங்கிணைத்து உலக வங்கிக் கடன் வசதியின் கீழ் சனவரியில் கண்டி பல போக்குவரத்து நிலையக் கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கும் இப்பிரதேசத்தில் நுழைவுப்பாதை அபிவிருத்திக்காக 1.5 பில்லியன் ரூபாய் வழங்கப்படும்.

2024 சனவரி மாதமளவில் ரயில்வே திணைக்களம் அனுராதபுரத்திலிருந்து மிஹிந்தலை வரையிலான புகையிரதப் பாதையின் புனரமைப்புப் பணிகளை பூர்த்தி செய்யும். அத்துடன் தனியார் துறையின் நிதியுதவியுடன் மிஹிந்தலை ரயில் நிலைய வளவை அடிப்படையாகக் கொண்டு போக்குவரத்து பொருளாதாரம், கிடங்கு மற்றும் சேமிப்பு வசதிகளுடன் கூடிய ஒரு பெரிய நகரத்தை உருவாக்குவதற்கு 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

புறக்கோட்டை, காலி, மாத்தறை, அனுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பாரிய நகரங்களிலும் சுற்றுலா தலங்களிலும் அமைந்துள்ள புகையிரத நிலையங்களின் அடிப்படையில் ஸ்டேஷன் பிளாசா என அழைக்கப்படும் ரயில் நிலைய நகரத்திற்கு, அரசாங்க தனியார் தொழில்முயற்சி மன்றங்களின் கீழ் ஒருங்கிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

### 55. மாகாணங்களுக்குள் கிடைக்கும் வருமானம்

மாகாண சபைகளில் சேகரிக்கப்படுகின்ற வருமானம் மீண்டெழும் செலவினங்களுக்காக மாத்திரம் வரையறுக்கப்படாது மாகாணத்தின் அபிவிருத்திக்கான மூலதனச் செலவினமாக பயன்படுத்துவது விரும்பத்தக்கதாகும். தற்பொழுது நடைமுறையிலுள்ள செயன்முறையை சடுதியாக மாற்றுவதன் மூலம் ஏற்படும் அசௌகரிகங்களை தடுக்கும் வகையில் 2024 இற்கான வரவுசெலவுத்திட்டத்திற்காக வருமானத்தின் 50 சதவீதத்தினை மூலதனச் செலவினமாக பயன்படுத்துவதற்கும் அதன்பின்னர், முழு வருமானத்தினையும் மூலதனச் செலவினமாக பயன்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### 56.உள்ளூராட்சி சபைகளின் சுய நிதியிடலை ஊக்குவித்தல்

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வருமானத்தினை திரட்டுவதற்கும் உள்ளூர் மக்களின் நலனுக்காக தேவையான நடவடிக்கைகளை முகாமை செய்வதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ள போதிலும் அந்த நிறுவனங்களின் சம்பளங்கள் மற்றும் ஏனைய அபிவிருத்தி வேலைகளுக்கான செலவுகளை அரசாங்கம் தாங்கிக் கொள்கின்றது.

எவ்வாறாயினும், தற்போது நிலவும் நிதிக்கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் உள்ளூராட்சி நிறுவனங்கள் சுய நிதியிடல் மாதிரியொன்றின்கீழ் தமது சேவைகளை வினைத்திறன் மிக்கதாக வழங்குவதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும். முதலாவது நடவடிக்கையாக 2024 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து மாநகர சபைகளின் சம்பளக் கொடுப்பனவுக்கான நிதியிடலின் 75 சதவீதத்தினை மாத்திரம் வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். 2025 ஜனவரி 01 ஆந் திகதியிலிருந்து நகர சபைகளுக்கு வழங்கப்படுகின்ற தொகையைக் குறைப்பதற்கும் அடுத்த 5 வருடங்களுக்கும் சுயநிதியிடலினை படிப்படியாக ஊக்குவிப்பதற்கும் முன்மொழிகிறேன்ஷ

### 57.ஹிங்குரக்கொட சர்வதேச விமான நிலையம்

மிக நீண்ட காலமாக கலந்துரையாடப்பட்ட போதிலும், ஹிங்குரக்கொட சர்வதேச விமான நிலைய கருத்திட்டம் தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளது. ஹிங்குரக்கொட சர்வதேச விமான நிலைய நிர்மாணமானது நாட்டின் அபிவிருத்திக்கான முக்கிய விடயமொன்றாகும். இதற்கான அடிப்படைச் செயற்பாடுகளுக்காக 2024 இல் 2 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

### 58.மத்திய அதிவேகப் பாதை

வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு செயற்பாடு நிறைவடைந்ததுடன், மத்திய அதிவேகப் பாதை இரண்டாவது கட்டம், அதாவது கடவத்தையிலிருந்து மீரிகமை வரையான பகுதியில் சீனாவுடன் இணைந்து வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குருநாகல் இருந்து கலகெதர வரையான பகுதியினை நிர்மாணிப்பதற்கு ஜப்பானின் உதவியினை பெறுவதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம். நாம் திட்டமிட்டுள்ளது கடுகஸ்தொடை வரையான அதிவேகப் பாதையினை நிர்மாணிக்க முடியுமா என்பதனை பரிசோதிப்பதாகும்.

### 59.திருகோணமலை நகரை அண்டிய அபிவிருத்தி

நாட்டின் பிரதான பொருளாதார நிலையமாக திருகோணமலை அபிவிருத்தி செய்வது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். விசேடமாக துறைமுகத்திற்கு அண்மையிலுள்ள பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்கு பாரிய பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளமுடியும் இது நீண்டகாலமாக மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமாகும். அதேபோன்று இந்திய முதலீட்டாளர்களுடன் இணைந்து இந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை முன்கொண்டு செல்ல முடியும். நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு சனாதிபதி செயலணியொன்றை அமைப்பதற்கு முன்மொழிகின்றேன்.

### 60.பசுமைப் பொருளாதாரம்

வர்த்தக நோக்குத்துறைகளால் இயக்கப்பட்டு வருகின்ற பொருளாதார வளர்ச்சிக்கு மேலதிகமாக மிகவும் நிலைபெறத்தக்க பசுமை வளர்ச்சி முயற்சிகளை நோக்கி மூலவளங்களை வழிப்படுத்துவதும் முக்கியமாக விளங்குகின்றது. இலங்கையின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலின் முழுமையான நோக்கு காலநிலை சுபீட்ச திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் காலநிலை இலக்குகளை நிறைவுசெய்வதற்காக மேலதிக மூலவளங்களுக்கான தேவைப்பாடுகளை இத்திட்டம் எடுத்துரைக்கின்றது. பசுமை நிதி வகைபிரித்தலை வெளியிடுதல், வாய்ப்புமிக்க பசுமை முதலீடுகள் மீது மேலதிக தெளிவுபடுத்தல்களை வழங்குதல்கள் போன்ற அவசியமான நடவடிக்கைகளையும் இலங்கை எடுத்துள்ளது. இலங்கையின் காலநிலை சுபீட்சத் திட்ட நடைமுறைப்படுத்தலுக்கு ஆதரவளிப்பதற்கான நிறுவனசார் கட்டமைப்பானது சனாதிபதி செயலகத்தில் காலநிலை மாற்ற அலுவலகத்தை நிறுவுதல், பொதுத் திறைசேரியில் காலநிலை நிதியிடல் அத்துடன் கொத்மலை நீர்த் தேக்கத்தின் மேற்பகுதியில் அரசாங்கம் ஏற்கனவே ஒதுக்கீடுசெய்துள்ளது.

### 61.இலங்கையின் தேசிய வர்த்தக நாமம்

வலிமையான நாடொன்றாக தோற்றம்பெறுவதற்கு இலங்கை, பயன்படுத்தாத பாரியளவிலான உள்ளார்ந்த ஆற்றலை கொண்டுள்ளது. இவ்வுள்ளார்ந்த ஆற்றலைப் பயன்படுத்திக்கொள்வதற்கு அதன் வலிமைகள், விழுமியங்கள், தனித்துவமான சலுகைகள் என்பவற்றின் அடிப்படையில் தேசத்தின் அடையாளத்தை வடிவமைப்பதற்கு முழுமையான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சியொன்றினூடாக முதற்தர சுற்றுலாப்பயணி அடைவிடமாகவும், கவர்;ச்சிகரமான முதலீட்டு மையமாகவும் அதன் விளக்கக்கூற்றை மீளவடிவமைப்பதற்கும் அதன் நிலையினை மீட்டெடுப்பதற்குமான புதிய முயற்சிகளுடன் தேசிய வர்த்தகநாமம் அமைத்தல் முயற்சிகளை மேற்கொள்வது முக்கியமானதாகும். அதற்கமைய, அரசாங்க நிறுவனங்கள், வியாபாரங்கள், பிரசைகள், கலாசார நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் என்பவற்றுடன் இணைந்து தேசத்தின் வர்த்தகநாமம் அமைத்தல் செயன்முறையினை வலுப்படுத்துவதற்கு ரூபா 100 மில்லியன் தொகையினை ஒதுக்கீடுசெய்கின்றேன்.

### 62.வழங்கல்

இலங்கையின் மூலோபாய அமைவிடத்தை மேம்படுத்தி அதை விநியோக மையமாக நிலைநிறுத்துவதில் மகத்தான பொருளாதார மதிப்பு உள்ளது. இருப்பினும், இந்த நீண்ட கால கனவை நனவாக்க பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. முதல் கட்டமாக, தேசிய விநியோகக் கொள்கையை உருவாக்கி செயல்படுத்துவதற்கு அனைத்து பங்குதாரர்களுடனும் அரசாங்கம் இணைந்து செயல்படும்.

இந்தியாவுடன் இலங்கை நில உறவுகளைப் பேணிக்கொள்ளும் என நம்புகிறோம். தென்மேற்கு இந்தியாவின் விநியோகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், தென்கிழக்கு இந்தியாவின் விநியோகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு திருகோணமலை துறைமுகத்திற்கும் கொழும்புத் துறைமுகம் பயன்படும் என்பது எமது நம்பிக்கை.

மேற்கு முனையம் மற்றும் 2030 ஆம் ஆண்டுக்கு பின்னர் எதிர்பார்க்கப்படும் கொழும்பு வடக்கு துறைமுகம் உருவாக்கப்பட்ட பின்னர் கொழும்பு துறைமுகத்தின் திறன் மேம்படும். திருகோணமலை துறைமுகமும் அபிவிருத்தி செய்யப்படுகிறது. இதன் மூலம் தென்னிந்திய பிராந்தியத்தில் விரைவான வளர்ச்சி மற்றும் தொழில்மயமாக்கலின் பலன்களை இலங்கை அனுபவிக்க முடியும். இலங்கையை பிராந்திய வசதி ஏற்பாட்டு மையமாக உயர்த்துவதே எமது இறுதி இலக்காகும்.

### 63.அநுராதபுரம் சர்வதேச பௌத்த நூலகம்

மகா விகாரை பல்கலைக்கழகத்தினை தாபிக்கின்ற பணியினை பூரணப்படுத்தும் வகையில் அநுராதபுரத்தில் நவீன மாதிரியிலான சர்வதேச பௌத்த நூலகமொன்றினைத் தாபிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். சர்வதேச பௌத்த நாடுகளில் கடந்த காலங்களில் கிடைக்கப்பெற்ற ஆவணங்களைப் பாதுகாப்பதுடன் ஆராய்ச்சி நோக்கங்களுக்காக அதனைப் பயன்படுத்துகின்ற கல்விமான்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் இந்த நூலகத்தினை தாபிப்பதற்கு விரும்புகின்றேன். இந்நோக்கத்திற்காக பொருத்தமான சட்ட மற்றும் நிறுவன கட்டமைப்பொன்றினை தயாரிப்பதற்கும் வேலைகளை விரைவில்; ஆரம்பிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன். இத்திட்டத்தினை மூன்று வருடங்களுக்குள் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

### 64.உள்ளூராட்சி சபைகளின் சுய நிதியிடலை ஊக்குவித்தல்

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வருமானத்தினை திரட்டுவதற்கும் உள்ளூர் மக்களின் நலனுக்காக தேவையான நடவடிக்கைகளை முகாமை செய்வதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ள போதிலும் அந்த நிறுவனங்களின் சம்பளங்கள் மற்றும் ஏனைய அபிவிருத்தி வேலைகளுக்கான செலவுகளை அரசாங்கம் தாங்கிக் கொள்கின்றது.

எவ்வாறாயினும், தற்போது நிலவும் நிதிக்கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் உள்ளூராட்சி நிறுவனங்கள் சுய நிதியிடல் மாதிரியொன்றின்கீழ் தமது சேவைகளை வினைத்திறன் மிக்கதாக வழங்குவதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும். முதலாவது நடவடிக்கையாக 2024 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து மாநகர சபைகளின் சம்பளக் கொடுப்பனவுக்கான நிதியிடலின் 75 சதவீதத்தினை மாத்திரம் வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். 2025 ஜனவரி 01 ஆந் திகதியிலிருந்து நகர சபைகளுக்கு வழங்கப்படுகின்ற தொகையைக் குறைப்பதற்கும் அடுத்த 5 வருடங்களுக்கும் சுயநிதியிடலினை படிப்படியாக ஊக்குவிப்பதற்கும் முன்மொழிகிறேன்;.

### 65.தேசிய மக்கள் சபை

கிராம மட்டத்தில் தீர்க்கப்படாத அபிவிருத்தித் தேவைகளை இனங்காண்பதன் மூலம் தேசிய மட்டத்தில் வளங்களை ஒதுக்கீடுசெய்யும் செயல்முறையினை மக்கள் சபை முறைமையின் கீழ் முன்னுரிமை வழங்குவதன் மூலம் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்மூலம் கட்சி, இனம் மற்றும் சமயம் போன்ற பாரபட்சமின்றி தனது அபிவிருத்தி முன்னுரிமைகளை கிராம மக்கள் ஒன்றிணைந்து தீர்மானிப்பதுடன், அவற்றை வள ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு நேரடியாக சமர்ப்பிக்க முடியுமாக இருக்கின்றது. விஷேடமாக கிராமத்திலுள்ள இளைஞர்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் அவர்களை கிராமத்திற்கு பயனுள்ள அபிவிருத்தித் தீர்மானங்கள் எடுப்பதில் நேரடியாக பங்கெடுக்க முடியும் என்பதுடன், நாட்டின் எதிர்கால போக்கினைத் தீர்மானிப்பதற்கும் பங்களிப்பு செய்ய முடியும். இந்நோக்கத்திற்காக ரூபா 700 மில்லியனை ஒதுக்கீடுசெய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### 66.இரத்தினக்கல் கைத்தொழில்

இலங்கையில் இரத்தினக்கல் கைத்தொழில் முழுமையான ஆற்றலினை அடைவதற்கு இலக்கிடப்பட்ட பொதுவாக இணங்கிய நிகழ்ச்சித்திட்டத்தில் இன்னும் குறைபாடு காணப்படுகின்றது. இந்த நாட்டில் இரத்தினக்கல் கைத்தொழிலில் காணப்படுகின்ற பிரச்சினைகளை கவனத்தில் கொண்டும் பெறுமதி சேர்ப்புக்காக வெளிநாடுகளில் இருந்து இரத்தினக்கல் இறக்குமதி தொடர்பிலும், பொதுவான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டும். இது நடுத்தரக் காலத்தில் அரசாங்கம், தனியார்துறை மற்றும் அனைத்துத் தரப்பினர்களினாலும் செயற்படுத்தப்படுதல் வேண்டும். இதற்காக அடுத்த 3 மாதங்களில் வேலைத்திட்டமொன்றினை தயாரித்து செயற்படுத்துவற்கு நான் முன்மொழிகின்றேன்.

### 67.காலி மாவட்டத்தில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துதல்

காலி மாவட்டத்தில் வெள்ளத்தைத் தடுக்கும் நடவடிக்கையொன்றாக கின் கங்கை நீர் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல் வேண்டும். இதனை நடுத்தரகால நிகழ்ச்சித்திட்டமொன்றாக நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றேன். அதன் ஆரம்ப பணிக்காக ரூபா 250 மில்லியன்களை செலவிடுவதற்கு முன்மொழிகின்றேன்.

### 68.படுகடன் மறுசீரமைப்பு

படுகடன் மீள்கட்டமைப்பு செயன்முறையினால் உருவாக்கப்பட்ட சாதகமான நிலை காரணமாக குறைந்தது மேற்குறித்த நிவாரண நடவடிக்கைகளையாவது முன்னெடுப்பதற்கான வளங்களை தேடிக்கொள்வதற்கு அரசாங்கத்தினால் முடியுமாக இருந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் இடம் பெற்ற இலங்கையின் பொது படுகடன் மறுசீரமைப்பானது 2022 இல் மொ.உ. உற்பத்தியில் 128 சதவீதத்திலிருந்து 2032 ஆண்டளவில் மொ.உ. உற்பத்தியில் 95 சதவீதத்திற்கு குறைவாக வீழ்ச்சியடையும். தற்;பொழுது நாம் மிகவும் நெருக்கடியான சரிசெய்யும் கட்டத்தினை கடந்துசெல்வதுடன் இந்த சேமிப்புகள் மக்களின் நன்மைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு அரசாங்கத்தினை இயலச்செய்யும்.

வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்பு செயல்முறையின் கீழ் சர்வதேச இறையாண்மை முறிகளின் மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக, தற்போதைய நிகர மதிப்பினடிப்படையில் இலங்கையின் நிகர கடனைக் குறைக்கும், இறையாண்மை முறிகளின் தீர்வாக புதிய கருவிகளை வெளியிடுவது அவசியமாகும். இதற்கிணங்க, தற்போதுள்ள சர்வதேச இறையாண்மை முறிகளின் தீர்வுக்கு இலங்கை அரசாங்கத்தின் கணக்குப் புத்தகங்களில் பரிவர்த்தனையை பதிவு செய்ய வரவுசெலவுத்திட்ட் ஒதுக்கீடுகள் தேவைப்படுகின்றன.

வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்பினைச் செயல்படுத்துவதற்கும், சர்வதேச இறையாண்மை முறிகளை வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்பின் கீழ் தீர்த்து வைப்பதற்கும், நான் ரூபா 3,000 பில்லியன் முன்மொழிகிறேன்.

### 69.கடன் வரையறையினை அதிகரித்தல்

வங்கி மறுமூலதனமாக்கல் மற்றும் வெளிநாட்டு படுகடன் மீளமைப்பினைச் செயல்படுத்துவதற்கு நீண்ட முதிர்வுகளுடனான புதிய கடன் கருவிகள் வழங்கப்படல் வேண்டும். எனவே, கடன் வாங்கும் வரம்பு அதே அளவில் அதிகரிக்கப்படல் வேண்டும், தற்போதுள்ள ஆவணங்களைத் தீர்ப்பதற்கு வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகள் தேவைப்படுகின்றன. இந்தக் கண்ணோட்டத்தில் கடன் வாங்கும் வரம்பை ரூபா 3,900 பில்லியனிலிருந்து ரூபா 7,350 பில்லியனாக ரூபா 3,450 பில்லியனால் அதிகரிக்க நான் முன்மொழிகிறேன்.

### 70.நிதித் துறையினை ஸ்திரப்படுத்தல்

நீண்ட காலத்திற்கான வங்கித்துறையின் ஸ்திரத்தன்மை தொடர்பான அனைத்து விவேகமான நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதை உறுதி செய்வதில் அரசாங்கம் ஆர்வமாக உள்ளது. இந்நோக்கத்திற்காக, சர்வதேச நாணய நிதியத் திட்டத்தால் ஆதரிக்கப்படும் கட்டமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளுக்கான ஒரு சுயாதீனமான சொத்துத் தர மதிப்பாய்வு நடாத்தப்பட்டது. இச்சுயாதீன சொத்துத் தர மதிப்பாய்வின் ஆரம்ப முடிவுகள், கூடுதல் மூலதன தாங்ககங்கள் விவேகமான அடிப்படையில் கட்டமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிடுகின்றன. வங்கி முறையின் மூலதன மேம்பாட்டு செயல்முறையை ஆதரிக்கும் வகையில், ரூபா 450 பில்லினை நான் முன்மொழிகிறேன்.

### 71.சட்ட மறுசீரமைப்புகள்

சிறுநிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்துகை அதிகார சபைச் சட்டமூலம் மற்றும் பிணையளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் சட்டமூலம் என்பன ஏற்கனவே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், சிறுநிதிச் சட்டம் வாடிக்கையாளருக்கு அதிகளவு சட்டரீதியான பாதுகாப்பினை வழங்குவதுடன், மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட பண பெறுகை வியாபாரங்கள் தாபிக்கப்படும். புதிய பிணையளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் சட்டமானது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளில் ஆதனங்களின் பெறும்பகுதியினை பாதுகாப்பதுடன், வளர்ச்சிக்கான கடனைப் பெறுவதற்கும் அவற்றுக்கு முடியுமானதாக இருக்கும்.

நிதி அமைச்சானது பொது நிதி முகாமைத்துவத்தில் சிறந்த ஆளுகைக் கோட்பாடுகளினை மேலும் மேம்படுத்துவதற்கான புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது. பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவல சட்டம், பொது நிதி முகாமைத்துவ சட்டம், பொது சொத்துக்கள் முகாமைத்துவ சட்டம், அரசுடமை தொழில்முயற்சிகள் மறுசீரமைப்புச் சட்டம் ஆகியன ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், திசெம்பர் மாதத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் முதலீட்டு நட்பு சட்டச்சூழல் ஒன்றினை உருவாக்குவதற்கு புதிய முதலீட்டுச் சட்டம் மற்றும் அரச தனியார் பங்குடமைச் சட்டம் என்பவற்றினை அறிமுகப்படுத்துவதற்கு நாம் முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளோம்.

# பொதுமக்களுக்கு பொலிஸார் விடுத்துள்ள அவசர எச்சரிக்கை

எப்படியாவது தனிக் காலில் நிற்கவேண்டுமென, இரவு, பகல் பார்க்காது உழைக்கும் கூட்டமொன்று உள்ளது. எந்தவொரு வேலைக்கும் செல்வதற்கு முயற்சிக்காது, வீடுகளிலேயே முடங்கிக்கொண்டு, அடுத்தவர்களிடமும் குடும்பத்தாரிடமும் கையேந்தும் குழுவொன்றும் உள்ளது. இதனிடையே ஏமாற்று பேர்வழிகளும் உள்ளனர்.

கொலை, கொள்ளை, வீடுகளை உடைத்து திருடுதல், முடிச்சுமாற்றிகள், பகிரங்கமாக கப்பம் கோருவோர், இலஞ்சம் வாங்குவோர், போதைப்பொருட்களை விற்று சம்பாதிப்போர் உள்ளனர். இவ்வாறான மோசடி கும்பல்களுக்கு மத்தியில், புதிய, புதிய மோசடிகளிலும் ஈடுபடுவோரும் இருக்கத்தான் செய்கின்றனர்.

பெருந்தொகை பணத்தைப் பெற்றுக்கொண்டு, வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி, அனாதைகளாக்கி விடுவோரும் உள்ளனர். இவ்வாறு ஏமாற்றும் பேர்வழிகளில் சிலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் நிறுத்தப்பட்டுள்ளனர். அவ்வாறானவர்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். இது வரவேற்கத்தக்கது. அந்த முயற்சியை இன்னும் கடுமைப்படுத்த வேண்டும்.

இந்நிலையில், தன்னுடைய மனைவியின் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி வேறொரு பெண்ணை இத்தாலிக்கு அழைத்துச்செல்வதற்கு முயன்ற ஒருவர் கைது செய்யப்பட்டார். இதனிடையே, தங்கம் மற்றும் பெறுமதியான பொருட்களைக் கடத்தி உழைப்போரும் உள்ளனர். பலரும் சிக்கிக்கொள்கின்றனர்.

வெளிநாடுகளுக்கு மனிதர்களைக் கடத்தி, பெருந்தொகையில் சம்பாதிக்கும் குழுக்கள் இயங்குவது ஒன்றும் புதிதல்ல. அவ்வாறான குழுக்களின் பிடிக்குள் சிக்கி, பெருந்தொகை பணத்தை இழந்தவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். இவ்வாறான ஏமாற்று பேர்வழிகளிடம் சிக்கிக்கொள்ளாது, விழிப்பாக இருக்கவேண்டும்.

ஒருகாலத்தில் சிறுபிள்ளைகள், மனைவி அல்லது கணவன் இன்றேல், குடும்ப உறுப்பினர்களில் யாராவது ஒருவரைக் கடத்தி, கப்பம் பெற்றவர்களும் உள்ளனர். கப்பமாகக் கேட்கும் பணத்தைக் கொடுக்கமுடியாதவர்கள், தங்களுடைய குடும்ப உறுப்பினர்களை இழந்துள்ளனர். ஆனால், நிலைமை தற்போது தலைகீழாக மாறிவிட்டது.

பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களை இலக்கு வைத்து, அவர்களின் பெற்றோர்களுக்கு அழைப்பை ஏற்படுத்தும் இனந்தெரியாத நபர்கள், “உங்களுடைய பிள்ளை விபத்தொன்றில் சிக்கிவிட்டது. அப்பிள்ளையை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளோம். உடனடியாக சத்திர சிகிச்சை அளிக்கப்படவுள்ளது. அதனால், பெருந்தொகை பணத்தை இந்த வங்கி கணக்கில் வைப்பிலிடுமாறு கோரும்” சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், விசேட ஊடக அறிக்கையை விடுத்துள்ள பொலிஸ் தலைமையகம், அநாமதேய தொலைபேசி அழைப்புகளுக்குப் பதிலளிக்க வேண்டாம் என்றும் அவ்வாறான அழைப்புகள் தொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு உடனடியாக தகவலைத் தருமாறும் கோரியுள்ளனர்.

இலங்கை பொலிஸ், தற்போதாவது விழித்துக்கொண்டுள்ளது என்றுதான் கூறவேண்டும். ஏனெனில், குறுஞ்செய்திகளை அனுப்பி பெரும் தொகையைக் கறந்தவர்களும், இழந்தவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். ‘ஈஸி கேஸ்’ முறைமையில் ஏமாற்றியபோதே, ஏமாற்றுப் பேர்வழிகளைக் கண்டறிந்து, அவ்வாறானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருந்தால், இந்த ஏமாற்றும் செயற்பாடு இந்தளவுக்கு வியாபித்து இருக்காது என்பதை எங்களுடைய அவதானமாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

எதிரிகளுடன் ஒருபோதும் கடும் போக்குடன் நடந்துகொள்ளக் கூடாது. எதிரிகளுடனும் கூட, நாம் இணங்கிப் போகக் கூடிய குணாம்சங்கள் இருக்கும். அந்தக் குணாம்சங்களின் ஊடாக நாம் எதிரிகளுடன் பழகுவது வாழ்க்கையில் நிம்மதி பெருகத் தடை இருக்காது. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவருடனும் பகையை வளர்ப்பது அவசியமில்லை. பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது.

கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்க முடியாது, வெறுப்புதான் மிஞ்சும். துன்பங்களை உடைத்தெறிய, நெஞ்சில் அமைதியுடன், எவரையும் கனிவுடன் நோக்குவோம்.

உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்தத் தேவையில்லை.

சொல்ல வேண்டிய விடயத்தில், ‘நான்’ என்ற மமதை கலக்காது, பணிவுடன் பேசுவதே, நிரந்தர வெற்றிக்கு வழி!

கர்வம், அகங்காரம், கோபம் போன்ற துர்க்குணங்கள் தனது குடும்பம், அயலட்டை, கிராமம், தேசம் என்பவற்றின் நலனுக்கும் கேடானவை, பதற்றம் வேண்டாம், சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை நம்பும் நாம், அனைவருக்கும் பிடித்ததைச் செய்வதே மேன்மை.

– நன்றி –பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ‘வறுமையின் நச்சு வட்டம்’

**மொஹமட் பாதுஷா**

மற்றுமொரு வரவு -செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மக்களின் வரவுகளை விட செலவுகள் பன்மடங்காக அதிகரித்து, குடும்பங்களின் துண்டுவிழும் தொகைக்கு கடைசி வரையும் ‘பாலம் போடுவதற்கு’ முடியாமல் போயுள்ள ஓர் இக்கட்டான காலப்பகுதியில் இந்த பட்ஜெட் முன்மொழியப்பட்டுள்ளது.

பேரின மற்றும் சிற்றினப் பொருளாதார நிதிக் கருவிகளில் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தி வரவு- செலவுத் திட்டத்தை தயாரிக்கின்றது என்று எடுத்துக் கொண்டாலும், வரவு -செலவுத் திட்டம் என்பது தமது வீடுகளில் உள்ள ஒவ்வொரு பொருளாதாரப் பிரச்சினையையும் தீர்த்து வைக்க வேண்டும் என்றே நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

‘பட்ஜெட் தமது கவலைகளுக்கு ஏதாவது தீர்வுகளைக் கொண்டு வரும்’ என்று மக்கள் நப்பாசை கொள்வதும், அது சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, ஏமாற்றங்களே மிஞ்சுவதும் இலங்கை மக்களுக்கு ஒன்றும் புதிய அனுபவமல்ல.

2024ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வரவு- செலவுத் திட்டம் குறித்த அதீத எதிர்பார்ப்புக்கள் மக்களுக்கு இருந்தன. அந்த அனைத்து எதிர்பார்ப்புக்களையும் இது திருப்திப்படுத்தியதாகக் கருதுவதற்கு இடமில்லை. வரவு- செலவுத் திட்டத்தின் ஊடாக மட்டும் எல்லா மக்களையும் சந்தோஷப்படுத்துவதும், பிரச்சினைகளைத் தீர்ப்பதும் நடைமுறைச் சாத்திமற்றதும் ஆகும்.

2019ஆண்டு இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு இலங்கைக்குக் கஷ்டகாலம் பிடித்தது. 30 வருட யுத்த காலத்தில் கூட இல்லாத அளவுக்குத் தேசத்தின் பொருளாதாரமும் குடும்பங்களின் பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்திருக்கின்றன. கோவிட் - 19 வைரஸின் இரண்டாவது அலை பரவத் தொடங்கியதில் இருந்து இந்த வீழ்ச்சியும் ஆரம்பித்தது.

கொரோனா வைரஸை காரணமாகக் கொண்டு கிட்டத்தட்ட உலகின் எல்லா நாடுகளிலும் ஒருவித பொருளாதார வீழ்ச்சியும் தேக்கநிலையும் ஏற்பட்டதை நாமறிவோம். ஆனால், அவர்கள் மிக விரைவாக மீண்டெழுந்து கொண்டார்கள்.

ஏனெனில், அவர்களது அரசியல், பொருளாதார கட்டமைப்புகள் மற்றும் இதர விடயங்கள் அனைத்தும் சரியாக முறைமைப்படுத்தப்பட்டிருந்தன. நாட்டைக் கொள்ளையடித்த ஆட்சியாளர்கள் இருக்கவில்லை, அரச பணத்தை ஏப்பமிட்ட அரசியல்வாதிகள், ஊழலுக்குத் துணைநின்ற அதிகாரிகள் என்று யாரும் அந்த நாடுகளில் இருக்கவில்லை.

குடும்ப அரசியலுக்காகக் குறுகிய அரசியல் நோக்கத்திற்காக எதை வேண்டுமென்றாலும் செய்யத் துணிகின்ற ஒரு இழிவான கலாசாரம் அங்கு இருக்கவில்லை. இன பாகுபாடோ, மத வேற்றுமையோ இருக்கவில்லை. அதனால் மக்களின் கூட்டு ஒத்துழைப்புடன் அந்த நாடுகள் ஓரளவுக்கு மீண்டெழுந்து விட்டதாக சொல்லலாம்.

ஆனால், இலங்கையில் இவையெல்லாம் தலைகீழாக இருந்தன. இன்னும் இருக்கின்றன. இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிக்கு கோவிட்-19 வைரஸே காரணம் எனப் பொதுவெளியில் கூறப்பட்டாலும், உண்மை அதுவல்ல என்பது சிறுபிள்ளைகளுக்கும் தெரியும்.

இலங்கைப் பொருளாதாரத்தை ஏற்கெனவே ஆண்டாண்டு காலமாகப் பல ‘கறையான்கள்’ அரித்திருந்தன. மத்திய வங்கி பிணைமுறி வரை கள்வர்களின் கைகள் நீண்டிருந்தன. ராஜபக்ஷக்கள் ஏப்பமிட்டது ஒருபுறமிருக்க, அவர்களது பெயர்களைச் சொல்லி அதிகாரிகளும், இணைப்பதிகாரிகளும் வேறுபலரும் ஊழல் செய்தனர்.

ஆகவே, கோவிட் வைரஸை விட மோசமானதும் கண்ணுக்குப் புலப்படக் கூடியதுமான ‘வைரஸ்கள்’ நீண்டகாலமாக அரசியல், பொருளாதார, சமூகக் கட்டமைப்புகளுக்குள் ஆழஊடுருவி அவற்றைக் கொஞ்சம் கொஞ்சமாக ஏற்கனவே அழித்து வைத்திருந்தன. இந்த நிலையில்தான், காகம் நிற்க பனம்பழம் விழுந்த கதையாகவே இலங்கைப் பொருளாதாரம் விழுந்ததே தவிர, கொரோனாவால் மட்டும் இது நிகழவில்லை.

அதன் பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் தொடர்பில் மக்கள் என்றுமில்லாத ஒரு எதிர்பார்ப்பைக் கொண்டிருந்தனர். ஆனால், அந்த எதிர்பார்ப்புக்கள் குறிப்பிட்டளவவே நிவர்த்திக்கப்பட்டுள்ளதாகக் கூறலாம். ஏனெனில், ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக வந்தார் என்பதற்காக, அவரால் மட்டுமே எல்லாவற்றையும் சரிப்படுத்தவும் முடியாது.

அரசியல் அணிகள் குழப்பங்களை விளைவித்துக் கொண்டும், ஒத்துழையாமலும் இருக்கின்ற ஒரு சூழலில் கூட ஜனாதிபதி தனது அரசியலையும் கவனித்துக் கொண்டு தன்னாலான முயற்சிகளைச் செய்து, நாட்டை மேலும் சரிந்து விழாமல் தூக்கிப் பிடிக்க முயன்றிருக்கின்றார் என்று சொல்லலாம்.

எது எவ்வாறிருப்பினும் சாதாரண மக்களின் வாழ்வு இன்னும் வழமைக்குத் திரும்பவில்லை. பொருளியலில் குறிப்பிடப்படும் ‘வறுமையின் நச்சு வட்டம்’ ஏற்படுத்தும் தாக்கம் போல, வருமான இழப்பு, பொருளாதார நெருக்கடிகள் சுழற்சிமுறையில் மீண்டும் மீண்டும் ஒவ்வொரு குடும்பத்தையும் பாதித்துக் கொண்டே இருக்கின்றன.

எரிபொருளுக்கும் ஏனைய பல அத்தியாவசியப் பொருட்களுக்கும் வரிசையில் நின்ற யுகம் முடிவுக்கு வந்திருக்கின்றது. பொருட்கள் ஓரளவுக்குச் சந்தையில் கிடைக்கின்றன. பொருளாதார நெருக்கடி குறைந்திருப்பதான ஒரு தற்காலிக தோற்றப்பாடு ஏற்பட்டுள்ளது.

அது உண்மைதான். ஆனால், நாட்டின் பொருளாதாரத்தைப் போலவே குடும்பப் பொருளாதாரத்தின் அடித்தளங்களும் ஸ்திரமாக, உறுதியாக இல்லை என்பதே நிதர்சனமாகும். இவற்றுக்கெல்லாம், கடந்த இரண்டு வருடங்களில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு- செலவுத் திட்டங்கள் தீர்வைக் கொண்டு வரும் என்று மக்கள் நம்பி, ஏமாறினார்கள்.

2024 பட்ஜெட் தொடர்பிலும் மக்களிடையே ஒன்றுதிரண்ட ஒரு எதிர்பார்ப்பு இருந்தது. ‘இந்த முறையாவது ஏதாவது நல்லது நடந்து விட மாட்டாதா?’ என்ற ஏக்கத்தின் வெளிப்பாடாகவே இதனைப் பார்க்க முடிகின்றது.

நாடும், அரசாங்கமும், நமது நாட்டு அரசியல்வாதிகளும் இருக்கின்ற நிலையையும் நடைமுறை யதார்த்தங்களையும் மக்கள் அறிவார்கள். சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்டவற்றிடம் உதவி கேட்டு நிற்கின்ற ஒரு தேசத்தினால் அனைத்து பொருளாதார குறி காட்டிகளிலும் குறுகிய காலப் பகுதிக்குள் மாற்றத்தைக் கொண்டு வர முடியாது என்பதை அவர்கள் புரிவார்கள்.

ஆனால், இன்னும் நாட்டில் ஊழல் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அரசியல்வாதிகள் மட்டுமன்றி அதிகாரிகளும் இதனைச் செய்கின்றார்கள். மறுபுறத்தில், வாழ்க்கைச் செலவுச் சுமை ஒவ்வொரு குடும்பத்தையும் எழுந்து நிற்க முடியாமல் அழுத்துகின்றது. இந்தப் பின்னணியிலேயே நாட்டில் இருந்து வெளியேறுவோரின் தொகை அதிகரித்து வருகின்றது.

வெளிநாடுகளில் தஞ்சம் கோருவோர், உள்நாட்டில் உள்ள அரசியல், பாதுகாப்பு நிலைமைகளை தமது ஆவணங்களில் முன்வைத்தாலும் கூட, உண்மையாகவே அண்மைக்காலத்தில் பலரும் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றமைக்கு பிரதான காரணம், பொருளாதாரச் சுமை என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

இதற்கெல்லாம் ஒரு முடிவும், விடிவும் காண வேண்டும் என்று நாட்டு மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையிலேயே இந்த பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அடுத்த வருடம் தேர்தல்கள் இடம்பெறவுள்ளதால், மக்களைக் குளிர்விப்பதற்காக அரசாங்கம் சில நல்ல முன்மொழிவுகளை முன்வைத்துள்ளதாகக் கூறலாம். ஆனால், மக்களை இது முழுமையாகத் திருப்திப்படுத்தவும் இல்லை. எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வாகவும் மாட்டாது.

நாட்டின், மக்களின் பொருளாதார பிரச்சினைகளையோ அதனூடாக ஏற்படுகின்ற வாழ்வியல் நெருக்கடிகளையோ ஒரு வரவு - செலவுத் திட்டத்தினாலோ அரச கொள்கை தீர்மானத்தினாலோ மாத்திரம் தீர்த்து வைக்க முடியாது என்பதை இங்குக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

வரவு - செலவுத் திட்டத்தில் அரசாங்கம் எல்லா அடுக்குகளில் உள்ள மக்களுக்கும் சலுகைகளை வழங்குவதில்லை. அது சரியாக மக்களைச் சென்றடைவதில்லை. அதேபோல், பட்ஜெட்டில் குறைக்கப்பட்ட பொருட்களின் விலைகள் அடுத்த மாதமே அதைவிட அதிகமாக அதிகரிக்கப்படுவதும் நடந்தேறுகின்றது.

மிக முக்கியமாக மக்களின் தனி மனித வருமானத்தை அதிகரிக்க முடியாவிட்டால் செலவைக் குறைத்து அவர்களின் கொள்வனவு சக்தியை உயர்த்த வேண்டும். அந்த வகையில் அரிசி, சீனி, பருப்பு, பால்மா, எரிவாயு என வெகுசில பொருட்களில் மட்டுமே நாம் கவனம் செலுத்துகின்றோம்.

ஆனால், எப்.எம்.சி.ஜி. என்ற வகைக்குள் அடங்குகின்ற அடிக்கடி கொள்வனவு செய்யப்படும் எல்லாப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. பற்பசை, சவர்க்காரம், தேயிலைத்தூள், பிஸ்கெட் என ஆயிரம் பொருட்கள் இந்தப் பட்டியலில் உள்ளன.

நாம் பால்மா பற்றியும், எரிவாயு பற்றியும் விவாதித்துக் கொண்டிருக்கின்ற வேளையில், சப்தமில்லாமல் பல நூற்றுக்கணக்கான பொருட்களின் விலைகள் பன்மடங்கு அதிகரித்தமையும் மக்களின் நெருக்கடிக்குக் காரணமாகும். ஆனால், அரசாங்கம் இந்த பலதேசிய கம்பனிகளின் தான்தோன்றித்தனத்தைக் கண்டுகொள்வதே இல்லை.

எனவே, பொருளாதார குறி காட்டிகள் மட்டும் பிரதான பொருட்களில் மட்டுமன்றி, சந்தையில் விற்கப்படுகின்ற ஒவ்வொரு பொருட்களின் விலை மட்டத்தையும் அரசாங்கம் கண்காணிக்க வேண்டும். அரச இயந்திரத்தின் செயற்பாடு வினைத்திறனாக்கப்பட வேண்டும். போக்குவரத்து பொலிஸார் தொடக்கம், உயர் அதிகாரிகள் வரை இலஞ்ச விரும்பிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

மிக முக்கியமாக, இவர்களை எல்லாம் குற்றம் பிடிக்க முடியாதளவுக்கு அழுக்குப் படிந்த கைகளுடன் கேள்வி கேட்க அருகதையற்ற நிலையிலுள்ள அரசியல்வாதிகள் திருத்தப்பட வேண்டும். அன்றேல் முற்றாக மாற்றப்பட வேண்டும்.

இவ்வாறான விடயப் பரப்புக்களில் மாற்றங்களைக் கொண்டு வராமல், ஒரு வரவு - செலவுத் திட்டத்தினால் மட்டும் மக்களின் எதிர்பார்ப்புக்களை எக்காலத்திலும் திருப்திப்படுத்துவது சாத்தியப்படாது.

## கடிதங்கள்

### இது நியாயமானதா?

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சில பிரதேசங்களுக்கான குடிநீர் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாகவே முறையாக விநியோகிக்கப்படுவதில்லை. எவ்விதமான முன்னறிவித்தலும் இன்றி குடிநீர் விநியோகம் துண்டிக்கப்படுவதன் காரணமாக பிரதேசத்தில் உள்ள பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தினமும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

கோடை காலங்களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படலாம். ஆனால், நீர்வளம் மிக்க மலையகத்தில் மாறி காலங்களில் குடிநீர் விநியோகத்தை துண்டிப்பது எவ்வகையில் நியாயமானது என பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

குறிப்பாக தலவாக்கலை தோட்டம், தலவாக்கலை புதிய கூட்டமைப்பு திட்டம், ரத்னீலக்கலை பிரிவு, குமாரகம பிரதேசம், தெவிசிரிபுற ஜெயந்தி மாவட்ட உள்ளிட்ட பகுதிகளுக்கான குடிநீர் விநியோகம் அடிக்கடி துண்டிக்கப்படுவதாக பிரதேசம் மக்கள் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

ஒரு சில பிரதேசங்களுக்கு தொடர்ச்சியாக இரண்டு அல்லது மூன்று நாட்கள் வரை குடிநீர் விநியோகம் துண்டிக்கப்பட்டிருந்ததாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தலவாக்கலை பிரதேச நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை காரியத்துடன் தொடர்பு ஏற்படுத்திய போதிலும் பயன் அளிக்கவில்லை. மழை காலங்களின் போது பிரதேசத்திற்கு விநியோகிக்கப்படும் நீர் குழாய்களில் அடிக்கடி அடைப்புகள் ஏற்படுவதும் குழாய்கள் பழுதடைவதும் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன.

இருந்த போதிலும் அவற்றை திறன்பட செய்து தடையின்றி பொது மக்களுக்கான குடிநீர் விநியோகத்தை செய்ய வேண்டியது யாருடைய பொறுப்பு?, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுப்பார்களாயின் எதிர்வரும் காலங்களில் பிரதேசத்திற்கான குடிநீர் விநியோகத்தை தடையின்றி வழங்க முடியும்.

– சுஜிதா








# தீபாவளி...

உலகெங்கிலும் உள்ள இந்துக்களால் கொண்டாடப்படும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி அலுவலகத்தில் ரணில் விக்ரமசிங்க தலைமையில் விசேட தீபாவளி கொண்டாட்ட நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (12) மாலை இடம்பெற்றது. ஜனாதிபதி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கொண்டாட்டம், இந்து சம்பிரதாயங்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டு மிகவும் எளிமையாகவும் நேர்த்தியாகவும் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதிக்கு இந்து சமய கலாச்சார முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.








# தீபாவளி தபால் முத்திரை வெளியீடு




தேசிய தீபாவளி தினமான ஞாயிற்றுக்கிழமை (12) வவுனியாவில் தபால் முத்திரை வெளியிட்டு வைக்கப்பட்டது.

கந்தசாமி ஆலய பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற தேசிய தீபாவளி நிகழ்வில் வைத்துக் குறித்த தபால் முத்திரை வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த தபால் முத்திரை இலங்கை தபால் திணைக்கள அத்தியட்சகர் ருவான் சரத்குமார, வெளியிட்டு வைக்க முதல் முத்திரையை அமைச்சர் விதுர விக்ரமநாயக்க பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, அதிதிகளாகக் கலந்து கொண்ட கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர ஆகியோருக்கு தபால் முத்திரை வழங்கி வைக்கப்பட்டதுடன், மதகுருமாருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில், இலங்கை தபால் திணைக்கள அத்தியட்சகருடன், வடமாகாண தபால் திணைக்கள அத்தியட்சகர் மதுமதி வசந்தகுமாரி மற்றும் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

- க. அகரன்



# சூர்யாவின் இன்ப அதிர்ச்சி

இயக்குநர் சிவா இயக்கத்தில் நடிகர் சூர்யா நடித்து வரும் திரைப்படம் 'கங்குவா'. இந்த படத்தில் இந்தி நடிகை திஷா பதானி, யோகி பாபு, கிங்ஸ்லி, கோவை சரளா, ஆனந்த் ராஜ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இந்த படத்துக்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைக்கிறார். 3டி முறையில் சரித்திர படமாக உருவாகும் கங்குவா 10 மொழிகளில் வெளியாக இருக்கிறது. 'கங்குவா' திரைப்படத்தின் பெர்ஸ்ட்லுக் போஸ்டர் மற்றும் மோஷன் போஸ்டரை அண்மையில் படக்குழு வெளியிட்டு ரசிகர்களை கவர்ந்தது. இதைத் தொடர்ந்து இந்த படத்தின் கிளிம்ப்ஸ் வீடியோ வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றது. இந்த நிலையில், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, கங்குவா படத்தின் புதிய போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. இந்த போஸ்டரில் நடிகர் சூர்யா கையில் நெருப்புடன் நிற்கும் காட்சி இடம்பெற்று இருக்கிறது. இந்த படம் அடுத்த ஆண்டு ஏப்ரலில் வெளியாக இருக்கிறது.

# பார்த்திபன் படத்தில் இணைந்த பிரபலம்



பார்த்திபன் இயக்கத்தில் உருவான 'இரவின் நிழல்' என்ற படம் நல்ல வரவேற்பை பெற்ற நிலையில், தற்போது அவர் அடுத்த படத்தின் பணிகளை ஆரம்பித்துள்ளார்.

அண்மையில், இந்த படத்தில் ஸ்ருதிஹாசன் ஒரு பாடலை பாடுகிறார் என்று அறிவித்தார். இமான் இசையில் ஸ்ருதிஹாசன் பாடிய பாடல் ஒலிப்பதிவு செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இந்த நிலையில், ஸ்ருதிஹாசனை அடுத்து இந்த படத்தில் தேசிய விருது வென்ற பாடகியான ஸ்ரேயா கோஷல் ஒரு பாடலை பாடியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பார்த்திபனின் 'இரவின் நிலவின்' படத்தில் இடம்பெற்ற 'மாயவா தூயவா' என்ற பாடலுக்காக அவருக்கு தேசிய விருது கிடைத்தது. இந்த நிலையில், பார்த்திபனின் அடுத்த படத்திலும் ஸ்ரேயா கோஷல் ஒரு பாடலை பாடி இருக்கும் நிலையில், இந்த பாடலுக்கும் தேசிய விருது கிடைக்குமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

பார்த்திபனின் அடுத்த படத்தின் தலைப்பு உட்பட மேலும் சில அறிவிப்புகள் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சந்தானத்தின் 'பில்டப்'



தீபாவளி திருநாளை முன்னிட்டு கார்த்தியின் 'ஜப்பான்' கார்த்திக் சுப்புராஜின் 'ஜிகர்தண்டா 2' மற்றும் விக்ரம் பிரபு நடித்த 'ரெய்டு' ஆகிய மூன்று திரைப்படங்கள் வெளியானது.

இந்த நிலையில், தீபாவளியை அடுத்து, சந்தானம் நடிப்பில் கல்யாண் இயக்கத்தில் உருவான 'பில்டப்' என்ற படத்தின் படப்பிடிப்பு அண்மையில், முடிவடைந்த நிலையில், இந்த படத்தின் வெளியீட்டு திகதி எதிர்வரும் 24 (நவம்பர்) என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து, இந்த படத்தின் ப்ரமோஷன் பணிகள் விரைவில் தொடங்க உள்ளது. சரியாக தீபாவளி முடிந்து இரண்டு வாரம் கழித்து வெளியாக இருக்கும் இந்த படம் நகைச்சுவை ரசிகர்களுக்கான விருந்தாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 80களில் ரஜினி, கமல் ரசிகர்களின் மோதல் குறித்த கதை அம்சம் கொண்ட இந்த படம் கலகலப்பாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

சந்தானம் ஜோடியாக ராதிகா ப்ரீத்தி நடித்த இந்த படத்தில் கே.எஸ்.ரவிக்குமார், ஆனந்தராஜ், மன்சூர் அலிகான், சுந்தர்ராஜன், ரெடின் கிங்ஸ்லி உள்பட பலர் நடித்துள்ளனர். ஜிப்ரான் இசையில் இந்த படம் உருவாகியுள்ளது.




# நயன்தாராவின் டெஸ்ட்

லேடி சூப்பர் ஸ்டார் நயன்தாரா தனது அடுத்த படத்தின் பெர்ஸ்ட் போஸ்டரை வெளியிட்டுள்ள நிலையில், அந்த போஸ்டர் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகைகளில் ஒருவரான நயன்தாரா தற்போது மாதவன், சித்தார்த் இணைந்து நடிக்கும் "டெஸ்ட்" என்ற படத்தில் முக்கிய இடத்தில் நடித்து வருகிறார். இந்தப் படத்தின் இன்னொரு நாயகியாக மீரா ஜாஸ்மின் நடித்து வருகிறார். யோகி பாபு நடித்த "மண்டேலா" என்ற திரைப்படத்தை தயாரித்த சசிகாந்த் இந்த படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகியுள்ளார்.

சாக்சி ஸ்ரீ கோபாலன் என்ற பெண் இசையமைப்பாளர் இசையமைக்கும் இந்த படத்தின் படப்பிடிப்பு, கடந்த சில மாதங்களாக விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

டெஸ்ட் கிரிக்கெட் கதையம்சம் கொண்ட இந்த படத்தின் பெர்ஸ்ட் போஸ்டரை நடிகை நயன்தாரா தனது சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டு ரசிகர்களுக்கு தனது தீபாவளி வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

மாதவன், நயன்தாரா, சித்தார்த் ஆகிய மூவரும் இந்த போஸ்டரில் இருக்கும் நிலையில் இந்த போஸ்டர் வைரல் ஆகி வருகிறது.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளில் இந்த படம் உருவாகி வரும் நிலையில், விரைவில் இந்த படத்தின் டீசர், ட்ரெய்லர் மற்றும் திரையரங்குகளில் வெளியாகும் திகதி ஆகியவை வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# “தேர்தல் பட்ஜெட் அல்ல”

வரவு-செலவுத் திட்டத்தை தேர்தல் வரவு-செலவுத் திட்டம் என்கிறார்கள். அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல்கள் நடைபெறவிருப்பதால் இவ்வாறு அழைக்கின்றனர். தேர்தலில் வெற்றி பெறும் நோக்கில் முடிவில்லாத சலுகைகளையும் சம்பள அதிகரிப்பையும் வழங்குவதே அத்தகைய தேர்தல் வரவு- செலவுத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. சுதந்திரம் அடைந்த பின்னரும் 75 வருடங்களில் பலமுறை அதுதான் நடந்தது என்றுஇ 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை, பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (13) சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த வரவு - செலவுத் திட்டம் வித்தியாசமானது. நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் வரவு-செலவுத் திட்டமாகும். தற்போதைய சர்வதேச போக்குகளுக்கு ஏற்ப ஒரு புதிய பொருளாதார அமைப்பின் அடித்தளத்தை அமைக்கும் பலமான எதிர்காலத்திற்கான வரவு -செலவுத் திட்டமாகும் என்றார்.

# ஆடம்பர வாழ்க்கை வாழ்வது தவறு

குறைந்த வருமானத்தில் ஆடம்பர வாழ்க்கை வாழ்வது தவறு என்றும் உண்மையான புரிதல் உள்ள ஒருவர் வரவு- செலவை சமப்படுத்தி தனது வாழ்க்கைத் தரத்தை வடிவமைக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டுகின்றது.

வருமானத்திற்கு ஏற்ப செலவுகள் செய்யப்பட வேண்டும். அதைத்தான் பௌத்த பொருளாதார தத்துவம் நமக்குக் காட்டுகிறது. ஆனால், சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளாக நாம் வருமானத்துக்கு ஏற்ப செலவு செய்யவில்லை. இதை நான் கூறும்போது, இந்நாட்டு அரசாங்கங்கள் வீண் செலவு செய்துள்ளன என்று நினைக்கலாம். அரசாங்கங்கள் மட்டுமல்ல. இந்த நாட்டில் உள்ள நாம் அனைவரும் அந்த தவற்றைச் செய்துள்ளோம்.

தொழில் வாய்ப்புகளை வழங்கியமை, சம்பளம் அதிகரித்தமை, இலவசமாக அரிசி வழங்கியமை, சலுகைகள் வழங்கியமை மற்றும் அரச நிறுவனங்கள் பராமரிக்கப்பட்டமை அனைத்தும் கடன் வாங்குவதன் மூலமோ அல்லது பணத்தை அச்சிடுவதன் மூலமோ மேற்கொள்ளப்பட்டது.

அரசாங்க வேலைவாய்ப்பு வழங்குதல், அரசாங்க வளங்களைப் பாதுகாத்தல், நிவாரணப் பொதிகள் வழங்குதல், பொருட்களின் விலைகளைக் குறைத்தல், கூடுதலான சம்பளம் வழங்குதல் போன்ற வாக்குறுதிகளின் மூலம்தான் தேர்தல்கள் வெற்றிகொள்ளப்பட்டன.

இவ்வாறான வருமானமல்லா சுகவாழ்வு வாழ்வதற்கு நாம் நாட்டுக்கும் உலகத்திற்கும் கடன்பட்டோம்.

# எமக்கு எஞ்சியது நாடு அல்ல, ஒரு நரகம்

இரண்டு அல்லது மூன்று லீட்டர் பெற்றோலுக்கு சண்டைபிடித்தோம். எரிவாயு தாங்கிகளுக்காக வாக்குவாதம் செய்தோம். ஒரு நாளைக்கு பத்து பதினைந்து மணித்தியாலங்கள் இருட்டில் இருந்தோம். பல்பொருள் அங்காடிகள் விறகுக்கட்டுகளை விற்கத் தொடங்கின. வியாபாரங்கள் வீழ்ச்சியடைந்தன. சுற்றுலாத்துறை விழ்ச்சியடைந்தது. வேலைவாய்ப்புகள் இல்லாமல்போனது. அத்தியாவசிய பொருட்கள் இல்லாமல் போனது. எல்லா இடங்களிலும் வரிசைகள். பொது போக்குவரத்து சேவைகள் முடங்கின, பாடசாலைகள் மூடப்பட்டன, பரீட்சைகளை நடத்த முடியவில்லை, உரத் தட்டுப்பாட்டால் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது, எமக்கு எஞ்சியது நாடு அல்ல, ஒரு நரகம். இந்த நரகத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றும் சவாலை யாரும் ஏற்க விரும்பவில்லை. “அந்தரே” கல்லை தூக்கியது போன்று பல்வேறு காரணங்களை கூறி சவால்களை தட்டிக்கழித்தனர். சிலர் ஜாதகம் பார்த்தார்கள். மற்றவர்கள் அரசியலமைப்பு ரீதியாக நிறைவேற்ற முடியாத நிபந்தனைகளை முன்வைத்தார்கள். இந்தப் பின்னணியில்தான் நான் இந்த நாட்டைப் பொறுப்பேற்றேன்.



# இறக்கும் தருவாயில் இருந்த நோயாளியை ஏற்றேன்

அந்த நேரத்தில் இறக்கும் தருவாயில் இருந்த ஒரு நோயாளியை நான் ஏற்றுக்கொண்டேன். நரகமாக மாறியிருந்த ஒரு நாடு. தடம் புரண்டு நாலாபுறமும் வீழ்ந்துகிடந்த பொருளாதாரம்.

பல்வேறு தடைகள் மற்றும் சிரமங்களுக்கு மத்தியில் முறையான மற்றும் முறைமை வாய்ந்த திட்டத்தின் கீழ் நாங்கள் இரவு பகல் பாராது வேலைசெய்ய ஆரம்பித்தோம். நாட்டை நரகத்திலிருந்து காப்பாற்றுவதற்குப் போராடினோம். அரச உத்தியோகத்தர்கள் அயராது உழைத்து நாட்டை மீட்டெடுக்கும் முயற்சிக்கு உதவிசெய்தனர். எங்களுடைய அனைத்து நட்பு நாடுகளும் தங்களால் இயன்றவரை எங்களைக் கவனித்துக்கொண்டன. நிவாரணங்களை வழங்கின. அப்போது, விரிவான சீர்திருத்தத் திட்டத்தின் மூலம் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும், பொருளாதாரத் துயரத்திலிருந்து மக்களைக் காப்பாற்றவும் கடுமையாகப் பாடுபடுவேன் என்று உங்கள் அனைவருக்கும் பகிரங்கமாகக் கூறினேன். இந்த முயற்சிக்கும் அர்ப்பணிப்புக்கும் பங்களிப்புச்செய்தது நான் மட்டுமல்ல. அதற்காக இந்நாட்டு மக்கள் கடுமையாக உழைத்தனர். அதற்காக அர்ப்பணித்தனர். அவ்வாறு செய்யாமல் நாட்டை பின்னுக்குத் தள்ளுவதற்கு முயன்றவர்களும் இருந்தனர்.

# தேவதை கதைகளை சொல்வதால் நாடு முன்னேறாது

நாம் செல்லும் பாதையில் மென்மேலும் புதிய எண்ணக் கருத்துக்களால் போசிக்கப்பட்டு தொடர்ந்து சென்றால் இந்த சவாலை நம்மால் வெற்றிகொள்ள முடியும்.

சமநிலை வாழ்வு என்ற கருத்திற்கு அப்பால் சென்று அரசியல் ஆதாயம் அடையக்கூடிய விடயங்களில் மட்டும் கவனம் செலுத்தித் தீர்வுகளைக் காண முயல்வது தோல்விக்குரியது என்பதை வரலாறு நிரூபித்துள்ளது. தோல்வி அடைவேன் என்று தெரிந்தும் ஏன் அதையே மீண்டும் மீண்டும் செய்கிறீர்கள்?

தேவதைக் கதைகளைச் சொல்வதால் நாடு முன்னேறாது. கனவு மாளிகைகளிலிருந்து வாக்குறுதிகளை அளிப்பதன் மூலம் ஒரு நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது.

ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் அளித்த தேர்தல் வாக்குறுதிகளால் நாடு நீண்ட காலமாகப் பின்னோக்கி சென்றது. அதன் இறுதி முடிவு நாடு வங்குரோத்துநிலையை அடைவதுதான் என்பது நம் கண் முன்னே உறுதி செய்யப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக நாட்டில் உள்ள சில குழுக்கள் இந்த நிலைமையை இன்னும் புரிந்து கொள்ளவில்லை.

# நமக்கு நாமே நேர்மையாக இருப்போம்

அரசியல் நோக்கத்திற்காக மாயைகளை பரப்புவதை நிறுத்துமாறு நான் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். நமக்கு நாமே நேர்மையாக இருப்போம். அரசியலை விட நாட்டை பற்றி சிந்திப்போம். நாட்டை மேலே உயர்த்தி வைப்பதற்கு ஒன்றுபடுவோம். நாடு வலிமையான பின்னர், அரசியல் இலக்குகளை பற்றி யோசிப்போம்.

ஒரு வருடத்திற்கு முன்பிருந்ததை விட இப்போது நம் நாட்டில் நிலைமை நன்றாக உள்ளது. நாட்டின் பொருளாதாரம் முற்றிலும் நல்ல நிலையில் உள்ளது என்று நான் கூறவில்லை. அன்று இருந்ததை விட ஒப்பீட்டளவில் இன்று சிறப்பாக உள்ளது. சிரமங்களை எதிர்கொண்டு அந்த நிலையைப் பெற்றோம். அர்ப்பணிப்புகளைச் செய்து, துன்பங்களை எதிர்கொண்டு அந்த நிலையை அடைந்தோம்.

# சில குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன

கடினமான பாதையில் நாம் படிப்படியாக முன்னோக்கிச் சென்றால், குறுகிய காலத்தில் நாம் ஒரு சிறந்த பொருளாதார சூழலை நிச்சயமாக உருவாக்க முடியும். நாம் செல்லும் இந்தப் பாதை சரியானது என்பதை கடந்த ஆண்டைத் திரும்பிப் பார்க்கும்போது, 100 சதவீத உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு லீட்டர் பெற்றோலுக்கு ஒரு மனிதனைக் கொன்ற நாடு இன்று வரிசையோ அல்லது வரையறைகளோ இல்லாமல் பெற்றோல் பெறுகிறது. எரிவாயு சிலிண்டர் ஒன்றை வாங்குவதற்கு வாரக்கணக்கில் தெருத் தெருவாக அலைந்து திரிந்த நாடு, இன்று ஒரே தொலைபேசி அழைப்பில் வீட்டுக்கு எரிவாயு சிலிண்டரைப் பெற்றுக்கொள்கின்றது. ஒரு நாளைக்குப் பத்துப் பன்னிரண்டு மணித்தியாலங்கள் மின்சாரம் இல்லாமல் இருந்த நாடு இன்று தொடர்ச்சியாக மின்சாரத்தைப் பெற்று வருகிறது.


இந்தப் பயணம் இதுவரை முன்னேறியிருந்தாலும், சில குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன. அவைகளை நாம் அடையாளம் கண்டுள்ளோம். நாங்கள் மிகவும் பணிவுடன் அந்தக் குறைகளையும் தவறுகளையும் திருத்திக் கொள்வதற்குச் செயல்பட்டு வருகிறோம். தடம் புரண்ட பொருளாதாரத்தை மீண்டும் பாதையில் வைப்பதால் மட்டும் நாம் திருப்தியடைய முடியாது. அது மாத்திரம் நமக்குப் பெரிய நிம்மதியையும் ஆறுதலையும் தரப்போவதில்லை. எங்கள் கடினமான காலம் இன்னும் முடிவடையவும் இல்லை. முழு நாடும் வெவ்வேறு வழிகளில் சிரமங்களை எதிர்கொள்கிறது.

# நரகத்தில் விழாமல் முன்னேற மறுசீரமைப்பு

நாங்கள் இது வரை வந்த பயணத்தில் எனது வெற்றிக்குக் காரணம், நாம் தொடங்கிய பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டமாகும். இந்த சீர்திருத்தத் திட்டம் 2022ஆம் ஆண்டைப் போல் பொருளாதார நரகத்தில் விழாமல் முன்னேறுவதற்கு இந்த மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம் அடித்தளம் அமைத்துள்ளது.

2013ஆம் ஆண்டு முதல் மின் உற்பத்திக்காக அரசு செலவழிக்கும் தொகைக்கு ஏற்றவாறு மின்கட்டணத்தைத் திருத்தும் நடைமுறை பின்பற்றப்படவில்லை. இதனால், மின்சார சபைக்கு கடும் நட்டம் ஏற்பட்டது. 2022ஆம் ஆண்டு வரை இந்த நட்டங்களை ஈடுசெய்வதற்கு இரண்டு அரச வங்கிகளிலிருந்து நிதியைப் பெற்றுக்கொண்டது.

மேலும், நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு நட்டமடைந்த பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நட்டமும் இரண்டு அரச வங்கிகளின் நிதியால் ஈடுசெய்யப்பட்டது.



# புற்று நோயாக பரவியுள்ளது

ஊழலும் மோசடியும் நாடு முழுவதும் புற்று நோயாக பரவியுள்ளது. நாட்டின் செல்வங்கள் திருடப்படுவதைத் தடுக்கும் சட்டங்களை இப்போது சமர்ப்பித்துள்ளோம். நாட்டின் செல்வம் மற்றும் வளங்களை திருடுவதாக பல்வேறு மக்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். ஆனால், நாட்டின் செல்வங்களையும் வளங்களையும் கொள்ளையடித்தவர்களைப் போலவே நாட்டின் எதிர்காலத்தையும் திருடியவர்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

சில அரசியல் குழுக்கள் வெற்றிகரமான வணிகங்களை மக்கள் மயமாக்கி நாட்டின் எதிர்காலத்தைத் திருடியுள்ளனர். திருகோணமலையில் எண்ணெய் தாங்கிகள் போன்ற வீணாகும் இடங்களை வேறு நாடுகளுக்குக் குத்தகைக்கு விடுவதை எதிர்த்ததோடு நாட்டின் எதிர்காலத்தையும் திருடினார்கள். இன்னும் சிலர் ஆடைத் தொழிலை எதிர்த்து நாட்டின் எதிர்காலத்தைத் திருடினார்கள். துறைமுகங்களின் அபிவிருத்தியை எதிர்ப்பதன் மூலம் எதிர்காலம் திருடப்பட்டது. இந்தப் பட்டியல் இன்னும் நீளமானது.

அனைத்து அபிவிருத்திக் கருத்திட்டங்களையும் எதிர்க்கும் அரசியல் குழுக்கள் திருகோணமலை எண்ணெய் தாங்கி வளாகத்தை அபிவிருத்தி செய்ய அனுமதிக்கவில்லை. அந்த எண்ணெய் தாங்கிகள் துருப்பிடிக்க இடமளிக்கப்பட்டதைப் போன்று நுவரெலியா தபால் நிலையமும் இடிந்து விழுவதை அவர்கள் விரும்புகின்றனர்.

# நாட்டின் வெற்றியே எனக்கு முக்கியம்

2022 இல் மீண்டும் அதே நரகத்தில் நம் நாடு விழுவதை அனுமதிக்க முடியாது. அந்த நிலைக்கு நாட்டை மீண்டும் கொண்டு வந்து, தமது அரசியல் இலக்குகளை நிறைவேற்ற சில குழுக்கள் இரவு, பகலாக முயற்சித்து வருகின்றன. ஆனால், எங்களுக்கு அரசியல் இலக்குகள் இல்லை. நாட்டை உயர்த்துவது மட்டுமே எங்களின் ஒரே நோக்கமாகும். சிலர் தேர்தல் வெற்றியை விட நாட்டின் வெற்றியே எனக்கு முக்கியம். இந்த வரவு -செலவுத் திட்டம் நாட்டின் வெற்றிக்காகத் தயாரிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டமாகும். பௌத்த பொருளாதார தத்துவத்தின்படி தயாரிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம். சமநிலை வாழ்வு என்ற எண்ணக்கருவின் அடிப்படையில், நாட்டுக்கும் நாட்டின் எதிர்காலத்திற்கும் நன்மை பயக்கும் பல முன்மொழிவுகள் இந்த வரவு-செலவுத் திட்ட ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

# ஏன் வரியை உயர்த்த வேண்டி ஏற்பட்டது

அரச வரிகளை உயர்த்துவது குறித்தும் கடுமையான விமர்சனங்கள் உள்ளன. நாம் ஏன் வரியை உயர்த்த வேண்டி ஏற்பட்டது? வரிக் கட்டமைப்புகள் மாற்றங்கள் மற்றும் வரி சீர்திருத்தங்கள் நீண்ட காலமாக புறக்கணிக்கப்பட்டன. இதன் காரணமாக அரசிறைத் துறை நலிவடைந்தது. அதை மீண்டும் வலுவாக வைத்திருப்பதற்கு, கட்டாயமாக வரி அமைப்பில் கட்டமைப்பு மாற்றங்கள் செய்யப்பட வேண்டியிருந்தது.

இதுவரை நிலுவைத் தொகையைச் செலுத்தியது எவ்வாறு? வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக் கொள்கிறோம். இலங்கை வங்கிகளில் இருந்து மேலதிகப் பற்றுகளைப் பெறுகிறோம். இந்த இரண்டு முறைகளிலும் நிலுவைத் தொகையைக் கட்ட முடியாதபோது, பணத்தை அச்சிடுகிறோம்.

வெளிநாட்டுக் கடன்களை மீள் கட்டமைப்புச் செய்யும் வரை வெளிநாட்டு நிதி மற்றும் வெளிநாட்டுக் கடன்களை வரையறுக்கப்பட்ட அளவிலேயே பெற்றுக் கொள்ள முடியும். 2021இல் 900 பில்லியன் ரூபாய் வங்கி மேலதிகப் பற்று பெறப்பட்டது. இப்போது வங்கி மேலதிகப் பற்றைப் பெறுவது ரூபா 70 பில்லியன் வரை குறைக்கப்பட்டுள்ளது. புதிய மத்திய வங்கிச் சட்டத்தின்படி, பணத்தை அச்சிட முடியாது. இதன் காரணமாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக ஆக அரசாங்க வருவாயை அதிகரிக்காவிட்டால், நாம் மீண்டும் பொருளாதார நரகத்தில் விழுவோம். வரி விலக்கு செய்யப்பட்டால், மற்றொரு வழியில் நிரப்புதல் செய்யப்பட வேண்டும். சில குழுக்கள் கூறுவது போல், எளிய - அழகான வாக்குறுதிகள் மூலம் இந்தப் பிரச்சினை தீராது.



# நுவரெலியா தபால் நிலையம்

நுவரெலியா தபால் நிலையம் சுற்றுலாத் துறைக்காக ஒதுக்கப்பட்டமை ஒரு தனிச் சம்பவம் அல்ல. நுவரெலியா அபிவிருத்தி திட்டத்தின் ஒரு பகுதி. எதிர்காலத்தில் நுவரெலியாவில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவும் எதிர்பார்ப்பும் எங்களிடம் இருக்கின்றது. நுவரெலியாவில் இன்னும் பல பாரிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் நுவரெலியாவின் சூழலையும் அதன் வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடங்களையும் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்றன.

காலி கோட்டையில் உள்ள பழைய தபால் நிலைய கட்டிடத்திற்கும் இந்த மக்கள் இதனையே செய்தனர். தற்போது அந்த கட்டிடம் இடிந்து விழுந்துள்ளது. சரியான நேரத்தில் அந்தக் கட்டிடம் சுற்றுலாத் துறைக்காக ஒதுக்கப்பட்டிருந்தால், அந்த வரலாற்றுக் கட்டிடம் நமக்கும் உண்டு. அந்நியச் செலாவணியும் கிடைக்கும்.

சிந்தித்துப் பாருங்கள். இதுவரை நம் நாட்டில் செயல்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார கருத்துக்கள் தோல்வியடைந்து விட்டன. தயவுசெய்து அவற்றைப் புரிந்து கொள்ளுங்கள். உங்களுடைய அண்டை வீட்டாருக்கும் அதைப் புரியவையுங்கள். நாம் புதிய அரசியல் மற்றும் பொருளாதார அமைப்பை உருவாக்கவில்லை என்றால், இங்கிருந்து முன்னோக்கிச் செல்ல வழியில்லை.

நாட்டில் இதுவரை காணப்பட்ட அரசியல் அமைப்பு மற்றும் பொருளாதார அமைப்பு முற்றிலும் தலைகீழாக மாற வேண்டும். கடந்த வரவு- செலவுத் திட்டத்திலும் அதைத்தான் சுட்டிக் காட்டினேன். “மாரா சாத்” நாடகத்தில் சுகதபால டி சில்வா சொல்வது போல் - தலையணை உறையைப் போல் தலைகீழாகப் புரட்டி புதுக்கண்ணால் பார்க்க வேண்டும்.

# ஒரு தலைவலியை ஏற்பட்டுள்ளது

பல சந்தர்ப்பங்களில், அதிக வருமானம் உள்ளவர்களிடம் புதிய வரிக் கோப்பைப் பதிவு செய்யும்படி கேட்டிருந்தோம். ஆனால், பெரும்பாலானவர்கள் அவ்வாறு செய்யவில்லை. வரிக் கோப்பினைத் திறந்த பின்னர், இல்லாத பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும் என்ற நம்பிக்கைதான் இதற்கு அடிப்படைக் காரணம். அது உண்மைதான். வரி விதிப்பில் தேவையற்ற சிக்கல்கள் உள்ளன. சில அதிகாரிகளின் தேவையற்ற செல்வாக்கிற்கு அடிபணிய வேண்டிய சந்தர்ப்பங்களும் உண்டு. வரி செலுத்துவது ஒரு தலைவலியை ஏற்படுத்துகின்ற அளவிற்கு சில கட்டண முறைகள் மிகவும் சிக்கலானவை.

நமது வரி அமைப்பில் உள்ள இது போன்ற பல கடுமையான குறைபாடுகளை நாங்கள் கண்டறிந்துள்ளோம். தற்போது மொத்த வரிச் சுமை சமூகத்தின் வரையறுக்கப்பட்ட சில பிரிவுகளின் மீது சுமத்தப்பட்டுள்ளது. வருவாய் சேகரிப்பு அமைப்புகளில் நீண்டகாலமாக இருந்துவருகின்ற பலவீனங்கள் மற்றும் கவனிக்காததன் காரணமாக வரி புறக்கணிப்பு ஏற்படுகிறது. இந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான பல முன்மொழிவுகளை இந்த வரவு - செலவுத் திட்டத்தில் நாங்கள் சேர்த்துள்ளோம்.

இந்த முன்மொழிவுகளை ஒரே இரவில் செயல்படுத்த முடியாது.

அவை முறையாகச் செயல்படுத்தப்பட வேண்டும். அந்த முன்மொழிவுகள் மூலம் அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்கும் போது, இன்றைய காலத்தை விட அதிக வரிச்சலுகைகளை வழங்குவதற்கு வாய்ப்பு கிடைக்கும்.


# தீய சுழற்சிக்கு பலியாகிவிடுகிறோம்

மின்சார சபை மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு பாரிய தொகையை செலவழிக்கிறது. இதன் விளைவாக, பெரிய அளவிலான, குறைந்த செலவில் புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தியை பிரதான மின்கட்டமைப்பில் சேர்ப்பதற்குத் தேவையான சட்டரீதியான தடைகள் அனைத்தையும் நாம் அகற்றியுள்ளோம். வினைத்திறனற்ற மின்சார சபையை வினைத்திறன்மிக்க நிறுவனமாக அதனை மீள் கட்டமைப்புச் செய்வதற்கான சட்டவிதிகள் இப்போது உருவாக்கப்பட்டு வருகின்றன. திறமையாக மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய நிறுவனமாக மாற்றங்களைச் செய்த பின்னர், மக்களின் மின் கட்டணம் தற்போது இருப்பதிலும் பார்க்க மிதமானதாக இருக்கும்.

சில அரசியல் குழுக்கள் மின்சார சபையை வினைத்திறன்மிக்க நிறுவனமாக மாற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றன. எப்படியாவது மின்கட்டணத்தைக் குறைக்குமாறு அவர்கள் கூறுகின்றனர். அப்படிப்பட்ட காரியத்தில் என்ன நிகழ்கிறது என்றால், நாம் மீண்டும் அந்த தீய சுழற்சிக்குப் பலியாகிவிடுகிறோம். அது சமநிலை வாழ்வு என்ற எண்ணக்கருவை நிராகரிப்பதாகும்.

# முழு நாட்டிற்கும் கடினமான காலம்

சில குழுக்கள் சம்பளத்தை அதிகரிக்கக் கோரி போராட்டம் நடத்தி வருகின்றன. இன்று அரச ஊழியர்களுக்கு மட்டுமல்ல, முழு நாட்டிற்கும் கடினமான காலம். இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து விடுபடுவதற்கு, நாம் நாளுக்கு நாள், படிப்படியாக முன்னேற வேண்டும். இது கடினமான பயணம். ஒருபுறம் வேலை நிறுத்தங்களால் முன்னேற்றம் தடைப்படுகிறது. மறுபுறம், நாட்டின் பெரும்பான்மையான மக்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். சம்பள உயர்வு பற்றியும் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். நினைத்தவாறு சம்பள உயர்வை வழங்க முடியாது. அரச ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கு அரசின் வரி வருவாயில் 35 சதவீதம் செலவிடப்படுகிறது. மேலும் சம்பளத்தை அதிகரிக்க வேண்டுமானால், அரசின் வருவாயை அதிகரிக்க வேண்டும். அரசாங்க வருவாயை அதிகரிக்காமலும் தேவைப்பட்டால் சம்பளத்தை அதிகரிக்கலாம். அது எப்படி? ஒன்றில் நீங்கள் பணத்தை அச்சிடல் வேண்டும் அல்லது வெளிநாட்டிலிருந்து கடன் பெற வேண்டும். அப்படி இல்லையென்றால் புதிதாக வரி விதிக்க வேண்டும். அந்த நடைமுறை சமநிலை வாழ்வு எண்ணக்கருவுக்கு எதிரானது. இவ்வாறான நடவடிக்கைகள் நாட்டை மீண்டும் பாதாளத்தில் தள்ளும்.



காஸாவில்

# பிணைக் கைதிகளை விடுவிக்க ஒப்பந்தம்

இஸ்ரேல் - ஹமாஸ் போர் ஒரு மாதத்துக்கும் மேலாக நீடிக்கும் நிலையில், பிணைக் கைதிகளை விடுவிக்குமாறு ஹமாஸுடன் இஸ்ரேல் பேரம் பேசி வருவதாகத் தெரிகிறது.

இது குறித்து, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, என்.பி.சி செய்தி நிறுவனத்துக்கு அளித்தப் பேட்டியில், “ஹமாஸ் குழுவினர் பிணைக் கைதிகளை விடுவிக்க ஏதுவாக அவர்களுடன் சில ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படலாம். ஆனால், அது என்ன மாதிரியான ஒப்பந்தம் என்பதை இப்போதைக்கு வெளிப்படுத்த முடியாது. அது திட்டத்தையே சிதைத்துவிடும். அதைப் பற்றி அதிகம் விவரம் தெரிவிக்காமல் இருப்பதே அது நிறைவேறுவதற்கான சாத்தியக் கூறை அதிகரிக்கும்” என்றார். அவருடைய இந்த சூசகப் பேச்சு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் காரணமாக இதுவரை காசாவில் ஆயிரக் கணக்கான குழந்தைகள் உட்பட 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இறந்துள்ளனர். இஸ்ரேலில் இதுவரை 1,400 பேர் இறந்துள்ளனர். 200க்கும் மேற்பட்டோர் அங்கிருந்து பிணைக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டனர்.

பிரித்தானியா

# கோலி கையெழுத்திட்ட பேட் பரிசளிப்பு

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் 5 நாள் பயணமாக பிரித்தானியாவுக்கு சென்றுள்ளார். அங்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை (12) தீபாவளி பண்டிகை கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு, பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தேநீர் விருந்து அளித்தார்.

இந்த விருந்தில் அமைச்சர் ஜெய்சங்கர்வுடன் அவரது மனைவி கியாகோ கலந்து கொண்டார். இதன்போது இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக்கிற்கு, தீபாவளி பரிசாக இந்திய நட்சத்திர கிரிக்கெட் வீரர் விராட் கோலி கையெழுத்திட்ட பேட் ஒன்றை அமைச்சர் ஜெய்சங்கர் வழங்கினார்.



# 250 ஆண்டுகள் கடந்த காதல் கடிதங்கள்

1756 முதல் 1763 வரை, பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் இடையில் நடந்த ஏழாண்டுப் போரின் போது, பிரெஞ்சு மாலுமிகளுக்கு அவர்களது மனைவிகளும், காதலிகளும் எழுதிய கடிதங்கள் பிரிட்டனின் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

அக்கடிதங்கள் அவர்களை அடையவில்லை. கடந்த 250 ஆண்டுகளாக இந்தக் கடிதங்கள் பிரிக்கப்படாமல் கிடந்தன.

தற்போது, இந்தக் கடிதங்களைக் கண்டுபிடித்த கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வரலாற்றுப் பேராசிரியர் ரெனோ மோரியோ, அவை 1700களில் வாழ்ந்த மாலுமிகள் மற்றும் அவர்களது குடும்பங்களின் வாழ்க்கையைப் பற்றிய அரிய பார்வையை பிரதிபலிக்கின்றது.



மேலும், இந்தக் கடிதங்கள் பத்திகளாகப் பிரித்து எழுதப்படவில்லை என்றும்

இவற்றில் நிறுத்தற்குறிகள் பயன்படுத்தப்படவில்லை என்றும் இது குறுஞ்செய்தி மொழி போல உள்ளதாகவும் கூறினார்.

மேலும், இவை மிகவும் சோகமானவை என்றும் அவர்கள் மீண்டும் சேர்ந்தார்களா என்று தெரியவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.


சென்னை

# 100ஐ தாண்டியது காற்று மாசு

தீபாவளி பண்டிகையால் சென்னையின் பல இடங்களில் காற்று மாசு அதிகரித்துள்ளதுடன், பல இடங்களில் காற்றின் தரக்குறியீடு 100ஐ தாண்டியுள்ளது.

தீபாவளி பண்டிகையன்று பாதுகாப்பான முறையில் பட்டாசு வெடிக்க பல்வேறு கட்டுப்பாடுகள் மற்றும் அறிவுரைகளை சென்னை பொலிஸ் அறிவுறுத்தியிருந்தது.

அதோடு, பண்டிகை தினத்தன்று, உச்ச நீதிமன்ற அறிவுறுத்தலின்படி, அனுமதிக்கப்பட்ட சுற்றுச் சூழலுக்கு உகந்த இரசாயனப் பொருட்களால் தயாரிக்கப்பட்ட பசுமை பட்டாசுகள் மட்டும் விற்கப்படவும், வெடிக்கப்படவும் வேண்டும் எனவும் அறிவுறுத்தியிருந்தது.



மேலும், காலை 6 முதல் 7 மணி வரை, இரவு 7 முதல் 8 மணி வரை என 2 மணி நேரங்கள் மட்டுமே பட்டாசு வெடிக்க வேண்டும் என கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது.

குறிப்பிட்ட நேரங்களில் அனைவரும் பட்டாசு வெடிக்கத் தொடங்கியதை அடுத்து, சென்னையில் காற்று மாசு மேலும் அதிகரித்துள்ளதுடன், சென்னையின் அனைத்து இடங்களிலும் காற்றின் தரக்குறியீடு 100ஐ தாண்டியுள்ளது.

நெல்லை

# குடிமகன்களின் பார் ஆக மாறுகிறது

நெல்லை நகரில் பரந்து விரிந்து கடல்போல் நயினார்குளம் காணப்படுகிறது. இக்குளத்துக்கு நெல்லை கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. நயினார்குளத்தின் தண்ணீர் மூலம் பல ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது.

நெல்லை மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் நயினார்குளத்தை சுற்றிலும் கரைகளை சீரமைத்து பொதுமக்கள் நடைபயிற்சி மேற்கொள்ளவும், சிறுவர்கள் விளையாட்டு உபகரணங்களும், மாலை நேரத்தில் பொதுமக்கள் அமர்ந்து குளத்தின் இயற்கை அழகை ரசிக்கும் வகையில் இருக்கைகள், மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.



இப்பணிகள் இன்னும் முழுமையாக முடிக்கப்படவில்லை. குளத்தின் தெற்குபகுதி கரையில் பணிகள் நடந்து வருகிறது. இந்நிலையில், குளத்தை சுற்றிலும் மறைவான இடத்திலும், குளத்தின் பாதுகாப்பு சுவர் பகுதியிலும் பகல், இரவு நேரங்களில் குடிமகன்கள் மதுக்குடிக்கும் பாராக மாற்றி வருகின்றனர்.



உலகக் கிண்ணம்:

# நெதர்லாந்தை வென்றது இந்தியா

இந்தியாவில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணத் தொடரில், பெங்களூருவில் ஞாயிற்றுக்கிழமை (12) நடைபெற்ற நெதர்லாந்து உடனான போட்டியில் இந்தியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இந்தியா: 410/4 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷ்ரேயாஸ் ஐயர் ஆ.இ 128 (94), லோகேஷ் ராகுல் 102 (64), றோஹித் ஷர்மா 61 (54), ஷுப்மன் கில் 51 (32), விராட் கோலி 51 (56) ஓட்டங்கள். பந்துவீச்சு: றொலெஃப் வான் டர் மேர்வே 1/53)

நெதர்லாந்து: 250/10 (47.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: டெஜா நிடமனுரு 54 (39), சிபிராண்ட் எங்கெல்பிரெச்ட் 45 (80), கொலின் அக்கர்மன் 35 (32), மக்ஸ் ஓ டௌட் 30 (42) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் சிராஜ் 2/29, ஜஸ்பிரிட் பும்ரா 2/33, குல்தீப் யாதவ் 2/41, இரவீந்திர ஜடேஜா 2/49, றோஹித் ஷர்மா 1/7, விராட் கோலி 1/13)


போட்டியின் நாயகன்: ஷ்ரேயாஸ் ஐயர்

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சமநிலையில் செல்சி – சிற்றி போட்டி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், செல்சியின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், நடப்புச் சம்பியன்கள் மன்செஸ்டர் சிற்றிக்குமிடையிலான போட்டியானது 4-4 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

சிற்றி சார்பாக, எர்லிங் பிறோட் ஹலான்ட் இரண்டு கோல்களையும், மனுவல் அகஞ்சி, றொட்றி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். செல்சி சார்பாக, தியாகோ சில்வா, ரஹீம் ஸ்டேர்லிங்க், நிக்கொலஸ் ஜக்சன், கோல் பல்மர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



“இலங்கையிலுள்ள ஆடுகளங்களாலேயே

# இலங்கை தடுமாறியது”



இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை தடுமாறியதற்கு இலங்கையிலுள்ள ஆடுகளங்களே காரணமென இலங்கையணியின் பயிற்சி ஆலோசகர் மகேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள ஆடுகளங்களானவை துடுப்பாட்ட வீரர்கள், அவர்களின் உச்ச போர்மை உலகக் கிண்ணத் தொடருக்கு முன்னர் அடைவதை அனுமதித்திருக்காததோடு, எவ்வாறு கடுமையாகப் பணியாற்ற வேண்டுமென சுழற்பந்து வீச்சாளர்களுக்கு கற்பித்திருக்கவில்லையென ஜெயவர்தன குறிப்பிட்டுள்ளார்.

உலகக் கிண்ணத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஐந்து சந்தர்ப்பங்களில் ஒரு தடவை மாத்திரமே 280 ஓட்டங்களை இலங்கை தாண்டியமை குறிப்பிடத்தக்கது என்பதுடன், இலங்கையின் பிரதான சுழற்பந்து வீச்சாளர் மகேஷ் தீக்‌ஷன 6 விக்கெட்டுகளையே கைப்பற்றியிருந்தார்.

இத்தாலிய சீரி ஏ தொடர்:

# சமநிலையில் றோமா – லேஸியோ போட்டி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், ஸ்டேடியோ ஒலிம்பிக்கோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற லேஸியோ, றோமா அணிகளுக்கிடையிலான போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற எம்போலியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான நாப்போலி தோற்றது.

இந்நிலையில், உடினிஸின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், அத்லாண்டாவுக்குமிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.



“இலங்கை கிரிக்கெட் சபையில்

# ஊழல், அரசியல் தலையீடு”

■ தீஷான் அஹமட்

இலங்கை கிரிக்கெட் சபையானது ஊழல் நிறைந்ததாகவும், அரசியல் தலையீடும் மிக்கதாக காணப்படுவது கவலை அளிப்பதாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த மஹ்ரூப், “இலங்கை கிரிக்கெட் சபைக்கு சர்வதேச கிரிக்கெட் சபையால் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதற்கு பிரதான காரணம் ஊழலும், அரசியலுமேயாகும். கிரிக்கெட் சபைக்குள் ஊழல் நிறைந்தால் எவ்வாறு கிரிக்கெட்டை முன்னகர்த்திச் செல்ல முடியும். இலங்கை கிரிக்கெட் சபை தொடர்பான விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, ஆளும் கட்சி உறுப்பினர்கள் நடந்து கொண்ட விதமும் வாக்களிப்பு நடைபெறவிருந்த சந்தர்ப்பத்தில் சபாநாயகர் சபையிலிருந்து இடையில் சென்றமையானது கிரிக்கெட்டிலும் அரசியல் இருக்கின்றதா என்கின்ற சந்தேகத்தை பலமாக ஏற்படுத்துகின்றது.



இலங்கை கிரிக்கெட் சபைக்கு தடைவிதிக்கப்பட்டமையானது இலங்கை கிரிக்கெட் ரசிகர்களை கவலைக்கு உள்ளாக்கியுள்ளது. இலங்கை கிரிக்கெட் சபையில் உள்ள ஊழல், அரசியல் தலையீடுகள் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்” எனக் குறிப்பிட்டார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 14 நவம்பர் 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.